## பள்ளிக் கல்வித் துறை

# 10ஆம் வகுப்பு

# தமிழ்

# பயிற்சிக் கட்டகம்

# தமிழ் முதல் தாள்

## செய்யுட் பகுதி

**ஒரு மதிப்பெண் வினா விடை. வினா எண் : 01 - 12 முடிய.**
**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. "இணையில்லை முப்பாலுக்கு இந்நிலத்தே" எனப் பாடியவர்.
அ. பாரதியார் ஆ. சுரதா இ. பாரதிதாசன்
2. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல்.
அ. நால்வர் நான்மணி மாலை ஆ. திருவள்ளுவமாலை இ. இரட்டை மணிமாலை
3. மருந்துப் பொருள்களின் பெயரில் அமைந்த இரு நூல்கள்
அ. திருக்குறள், நன்னூல் ஆ. திரிகடுகம், ஏலாதி இ. நற்றிணை, அகநானூறு
4. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்று பாடியவர்
அ. கவிமணி ஆ. பாரதிதாசன் இ. பாரதியார்
5. இளங்கோவடிகள்_____ நாட்டைச் சார்ந்தவர்
அ. சோழ ஆ.சேர இ. பாண்டிய
6. குடும்ப விளக்கு _______படைப்புகளுள் ஒன்று
அ. பாரதியார் ஆ. பாரதிதாசன் இ. சுரதா
7. சரசுவதி அந்தாதி_____ இயற்றிய நூல்களுள் ஒன்று
அ. கம்பர் ஆ. ஒட்டக் கூத்தர் இ. புகழேந்தி
8. கம்பரைப் புரந்தவர்_______
அ. ஔவையார் ஆ. புகழேந்தி இ. சடையப்ப வள்ளல்
9. 'பத்திச் சுவை நனி சொட்டப் பாடிய கவி வலவ' எனப் பாடியவர்________
அ.பெ. சுந்தரனார் ஆ. மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் இ. கவிஞர் வெ. இராமலிங்கனார்
10. "அரியவற்றுள் எல்லாம் அரிது" பேணித் தமராக் கொளல்
அ. சிறியவர் ஆ. பெரியார் இ. உறவினர்
11. நற்றிணையைத் தொகுப்பித்தவர்________
அ. பன்னாடு தந்த மாறன் வழுதி ஆ. இளம் பெருவழுதி இ. உக்கிரப் பெருவழுதி
12. திறனறிந்து தேர்ந்து கொள்ள வேண்டியவர்________
அ. அன்புள்ள பெற்றோர் ஆ. ஆர்வமுள்ள நண்பர் இ. மூத்த அறிவுடையார்
13. 'நாமார்க்கும் குடியல்லோம்' என்னும் பாடல்________அச்சமில்லை அச்சமில்லை எனப் பாடத் தூண்டியது.
அ.பாரதிதாசனை ஆ. சுரதாவை இ. பாரதியாரை
14. கேழல் என்பதன் பொருள்_________
அ. எருமை ஆ. புலி இ. பன்றி
15. நெய்தல் கலியைப் பாடியவர்_________
அ.ஓரம்போகியார் ஆ. கபிலர் இ. நல்லந்துவனார்
16. பணை என்னும் சொல்லின் பொருள்
அ. அரசு ஆ. ஆல் இ. மூங்கில்
17. குலசேகராழ்வார் பாடல் ________தொகுப்பில் உள்ளது.
அ. திருவியற்பா ஆ. முதலாயிரம் இ. பெரிய திருமொழி
18. கலித்தொகை ______ நூல்களுள் ஒன்று.
அ.பத்துப்பாட்டு ஆ. எட்டுத்தொகை இ. பதினெண் கீழ்க்கணக்கு

II. **கோடிட்ட இடத்தினை நிரப்புக:**

1. மாணிக்கவாசகர் கட்டிய கோவில் திருப்பெருந்துறையில் உள்ளது.
2. ஜி.யு. போப் திருவாசகத்தை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்தார்.
3. திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்.
4. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின் எய்துவர் எய்தாப் பழி.
5. ஏலாதியை இயற்றியவர் கணிமேதாவியார்.
6. இரட்டைக் காப்பியம் என்பன சிலப்பதிகாரமும் மணிமேகலையும் ஆகும்.
7. கம்பராமயணம் ஆறு காண்டங்களை உடையது.
8. 'அரி' என்னும் சொல்லின் பொருள் நெற்கதிர்.

9. புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
10. சேக்கிழார் பெருமான் அருளியது பெரியபுராணம்.
11. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் அதிவீரராம பாண்டியன்.
12. போலிப்புலவர்கள் பெருகவிடாமல் செவியை அறுப்பவர் வில்லிப்புத்தூரான் .
13. நால்வகைப் பாக்களும் வயலுக்கு வரப்புகளாய் அமைந்துள்ளன.
14. அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து தீதின்றி வந்த பொருள்.
15. முதலிலார்க்கு ஊதியம் இல்லை.
16. தாண்டக வேந்தர் என அழைக்கப்படுபவர் திருநாவுக்கரசர்.
17. உமறுப்புலவரை ஆதரித்த வள்ளல் சீதக்காதி.
18. கலம்பகம் 96 (தொண்ணூற்றாறு) வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

## செய்யுள்பகுதி - 1 வினா எண் : 21 - 27

**குறுவினாக்கள் :**

1. நன்றிக்கு வித்தாவது எது?
நல்ல ஒழுக்கம்
2. என்றும் இடும்பை தருவது எது?
என்றும் இடும்பை தருவம் தீயொழுக்கம்.
3. ஒழுக்கத்தினால் எய்துவது எது?
இழுக்கத்தினால் எய்துவது எது?
1. மேன்மை
2. பெரும் பழி
4. ஞாலம் கருதினும் கைகூடும் எப்போது?
காலமறிந்து, இடத்தோடு செயல்பட்டால் பொருந்தி, உலகையே அடைய விரும்பினும் கை கூடும்.
5. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?
ஆட்டுக்கிடா பகையைத் தாக்குவதற்குப் பின்வாங்கும் தன்மையைப் போன்றது.
6. ஒழுக்கமின்மையால் ஏற்படும் குற்றங்கள் யாவை?
ஒழுக்கம் தவறுதலால் வரும் குற்றத்தினை நன்கு உணர்ந்த மனவலிமை மிக்கோர் அந்த ஒழுக்கத்திலிருந்து சிறிதும் விலகமாட்டார்.
7. காலம் அறிந்து செயல்படுவது எவ்வாறு?
தகுந்த கருவிகளோடு, ஏற்ற காலத்தையும் அறிந்து செயல்பட்டால் செய்வதற்கு அரிய செயல்கள் எவையும் இல்லை.
8. கொக்கை உவமையாகக் காட்டி வள்ளுவர் விளக்கும் கருத்து யாது?
வாய்ப்பு கிடைக்காத போது அமைதியாக காத்திருத்தல் வேண்டும். உரிய காலம் வந்ததும் கொக்கைப் போல் விரைந்து செயல்பட வேண்டும்.
9. திருவள்ளுவருக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?
1. முதற்பாவலர் 2. தெய்வப்புலவர் 3. செந்நாப்போதார் 4. பெருநாவலர்
10. கூகை, காக்கை - இவற்றை எடுத்துக்காட்டாகக் கூறி, வள்ளுவர் விளக்குவது யாது?
தன்னிலும் வலிய கோட்டானைக் காக்கை பகலில் வெல்லும். அதுபோல, தன்னிலும் வலிமையான பகைவரைக் காலமறிந்து வெல்ல வேண்டும்.
11. ஏலாதி - நூற்குறிப்பு எழுதுக.
1. பதிணெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஏலாதியும் ஒன்று.
2. இந்நூல் தமிழுக்கு அருமருந்து
3. இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி, உடல்நோயைப் போக்கும்.
4. இந்நூலின் நற்கருத்துகள் கற்போரின் அறியாமையை அகற்றும்.
12. பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?
1. பிறர்க்குப் பணிந்தும் 2. நல்வழியில் நடந்தும் 3. மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றுதல்
4. நுண்ணறிவு நூல்களை ஆராய்தல்
13. சிலம்பு உணர்த்தும் மூன்று உண்மைகள் யாவை?
1. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்
3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.

14. 'நற்றிரம் படராக் கொற்கை வேந்தே' - யார் யாரிடம் கூறியது?
கண்ணகி, பாண்டிய மன்னனிடம் கூறியது
15. ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?
1. சிலப்பதிகாரம் 2. மணிமேகலை 3.சீவகசிந்தாமணி 4. வளையாபதி 5. குண்டலகேசி
16. தமிழர் எதற்கு நாணிடவும் வேண்டும்?
வறுமையினால் தமிழன் ஒருவன் கல்வி கற்க முடியாத நிலை ஏற்படுமானால் இங்குள்ளோர் நாணிட வேண்டும்.
17. பாவேந்தர் படைப்புகள் யாவை?
1. குடும்ப விளக்கு 2. இருண்ட வீடு 3.தமிழியக்கம் 4. பாண்டியன் பரிசு
18. குகனின் வேண்டு கோள் யாது?
1. இவ்வுலகு அனைத்திற்கும் செல்வம் போன்றவனே !
2. தங்களை இத்தவக் கோலத்தில் பார்த்த என்னிரு கண்களையும் எடுக்க முடியாத நிலையில் உள்ள கள்வன் நான்
3. மனத்துயரோடு என்னிருப்பிடம் செல்லத் துணியேன்
4. தங்களுக்கு வேண்டிய தொண்டு செய்வேன்
19. "அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம் - யார் யாரிடம் கூறியது?
இராமபிரான் குகனிடம் கூறியது.
20. கையுறைப் பொருள்களாகக் கொண்டு சென்றன எவை? யாருக்குக் கொண்டு சென்றான்?
அ. தேனும் மீனும் கொண்டு சென்றான். ஆ. இராமபிரானுக்குக் கொண்டு சென்றான்.
21. சான்றோர் யாருடன் சேர்வர்?
சான்றோர் சான்றோருடன் சேர்வர்
22. புறநானூறு - குறிப்பு எழுதுக.
1. புறம் பற்றிய நானூறு பாடல்கள் கொண்டது
2. சங்ககால மக்களின் வாழ்க்கை நிலை, மன்னர்களின் வீரம், கொடை, புகழ், வெற்றிகள் பற்றிக் கூறுவது.
23. வந்தவர் வாசீகர் என அறிந்ததும் அப்பூதியடிகள் என்ன செய்தார்?
1. தன் தலைமேல் கை குவித்து வணங்கினார்
2. சொற்கள் தடுமாறிடவும், கண்களில் கண்கள் பெருகிட, உடல் சிலிர்க்கப் பூமியில் வீழ்ந்து வணங்கினார்.
24. 'இப்போது இங்கு அவன் உதவான்' -யார் யாரிடம் கூறியது?
அப்பூதியடிகள் திருநாவுக்கரசரிடம் கூறியது
25. அப்பூதியடிகள் எவ்வெவற்றுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயரிட்டார்?
அப்பூதியடிகள் தம்மிடம் உள்ள 1.அளவைகள் 2. மக்கள் 3. எருமைகள் 4. நிறைகோல் 5. பசுக்கள்
26. வயல்தரும் விளைவுகளாகத தமிழ்விடு தூது கூறுவன யாவை?
1. அறம் 2. பொருள் 3. இன்பம் 4. வீடு
27. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?
1. பிள்ளைப் பாண்டியன் 2. வில்லிப்புத்தூர் ஆழ்வார் 3. ஒட்டக் கூத்தன்
28. சொல் ஏர் உழவர் யார்? நாற்கரணத்து ஏர்கள் எவை?
1. சொல் ஏர் உழவர் புலவர்கள்
2. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பன நாற்கரணங்கள் ஆகும்.
29. யாருக்குப் பகைவராலும் தீங்கு செய்ய இயலாது?
அறிவிற் சிறந்த பெரியோரைச் சார்ந்து நடப்பவர்க்குப் பகைவர் செய்யக்கூடிய தீங்கு யாதொன்றும் இல்லை.
30. பகைமை இருளைப் போக்குவது எது என வள்ளுவர் கூறுகிறார்?
செல்வம் என்றும் அணையா விளக்கு அதனை உடையவர் நினைத்த இடங்களுக்கெல்லாம் சென்று, பகைமை என்னும் இருளைப் போக்கும்.
31. தேவாரம் - பொருள் எழுதுக.
1.தே + வாரம் எனப் பிரிக்கும்போது தெய்வத் தன்மையுடைய இசைப்பாடல்கள
2.தே +ஆரம் எனப்பிரிக்கும் போது தெய்வத்திற்குச் சூட்டப்பெறும் பாமாலை என்றும் கூறுவர்.
32. சிவபெருமான் எத்தன்மையன்?
எவருக்கும் ஆட்படாதத் தன்மையுடையவன் சங்கரன்.
33. வனத்தில் வாழும் விலங்குகளாகச் சீறாப்புராணம் குறிப்பிடுவன யாவை?
காட்டெருமை, பன்றி, கரடி, கலைமான், சிங்கம், யானை முதலியன.
34. சீறாப் புராணத்தில் சிங்கம் எனப் பொருள் தரும் வேறு சொற்கள் யாவை?

சிங்கம் எனப் பொருள் தரும் வேறு சொற்கள் மடங்கல், கேசரி ஆகியனவாகும்.

35. புலி வசனித்த படலத்தின் மூலம் நீயறியும் அறம் யாது?
 1. உலகிலுள்ள உயிரினங்கள் அனைத்தும் ஒன்றெனக் கருதுகின்ற அருளாளர்கள் முன் கொடிய உயிரினங்களும் பணிந்து நடக்கும்.

36. கலம்பக நூல்களுள் முதல் நூல் எது?
 நந்திக் கலம்பகம்.

37. நந்திக் கலம்பகம் யார் மீது பாடப் பெற்றது?.
 பல்லவ மன்னன் மூன்றாம் நந்திவர்மன்.

38. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.
 அம்மானை, குறம், மறம், தவம்

39. ஆற்றுதல் என்பது யாது?
 இல்லற வாழ்வில் வருந்தி, வந்தவர்க்கு உதவுதல்.

40. ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பின் பெயர் என்ன?
 நாலாயிர திவ்விய பிரபந்தம்

## செய்யுள் பகுதி 2 வினா எண் 35 - 39.

**சிறுவினாக்கள்: நான்கு மதிப்பெண்கள்:**

1. மாணிக்க வாசகர் இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?
 எல்லாம் உடைய பெருமானே
 1. நான் உன்பால் பேரன்பு கொண்டதன் காரணமாக உடல் சிலிர்த்தேன் உள்ளம் நடுங்கினேன்
 2. நறுமணம் கமழும் உன் திருவடிகளைக் கருத்திற்கொண்டு, தலைமேல் கைகுவித்து வணங்கினேன்.
 3. கண்களில் நீர் பெருகுமாறு உள்ளம் வருந்த உருகினேன்
 4. பொய்ப்பொருளை விலக்கி, மெய்ப்பொருளாகிய உன்னை நினைத்து துதித்தேன்.
 5. ‘வெல்க வெல்க’ என உன் அரும்பெரும் செயல்களையும் போற்றிப் புகழ்ந்தேன்
 6. இத்தகைய ஒழுக்கத்தினைக் கைவிடேன்.
 7. எனவே உன் அடியவர்களுள் ஒருவனாக என்னை ஏற்றுக் கொள்வாயாக”என்று வேண்டுகிறார்.

2. காலமறிதல் தேவைபற்றி எழுதுக.
 1. கோட்டான், காக்கையைக் காட்டிலும் வலிமையுடையது.
 2. ஆயினும் கோட்டானுக்குப் பகலில் கண் தெரியாது.
 3. அக்காலமறிந்து காக்கை அதனை வெல்லும்.
 4. அதைப்போல தம்மிலும் வலிமை மிக்க பகைவரைக் காலமறிந்து போரிட்டால் எளிதில் வெல்லலாம்.

3. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்கு பாரதிதாசன் கூறும் வழி வகைகள் யாவை?
 1. பல்வேறு துறை நூல்களும் தமிழில் வெளி வர வேண்டும்.
 2. அந்நூல்களை யாருடைய உதவியும் இன்றித் தாமே படித்து அறியும் வண்ணம் எளிய தமிழில் இருத்தல் வேண்டும்.
 3. தமிழின் பெருமையினை மதங்களில் சேர்க்கக் கூடாது
 4. எல்லா இடங்களிலும் இலவச நூல் நிலையங்களை ஏற்படுத்துதல் வேண்டும்.
 5. தமிழின் பெருமைகளைக் கூறுவதிலேயே காலம் கழித்தோம்
 6. குறைகளை நீக்கிப் புதுமைகைளைப் படைத்தோமா? இல்லை உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்ப்போம் வாரீர்.

4. விருத்த மாதவரை நோக்கி இராமன் கூறியது என்ன?
 1. குகன், தான் கொண்டு வந்த தேனையும், மீனையும் ஏற்குமாறு வேண்டினான்.
 2. இராமன், முனிவர்களை நோக்கி உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பரிவின் காரணமாகக் குகன் கொண்டு வந்த இப்பொருள்கள் கிடைத்தற்கரியன அமுதத்தைவிடச் சிறந்தன. இவை எத்தகையனவாய் இருப்பினும், அன்பு கலந்தது எனில் தூய்மையானவையே, எம் போன்றோர்க்கும் உரியன ஆகையால் இனிமையான இவை நாங்கள் விரும்பி உண்டதற்கு சமம் என்றார்.

5. கம்பராமாயணம் - சிறு குறிப்பு வரைக.
 1. இராமனது வரலாற்றைக் கூறும் நூல் இராமாயணம் எனப்பட்டது.
 2. வடமொழியில் வான்மீகிப் புலவர் எழுதியதைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டது.
 3. கம்பர் இயற்றிய இராமாயணம், கம்பராமாயணம் எனப்பட்டது.
 4. கம்பர், தாம் இயற்றிய நூலுக்கு இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.

இந்நூலின் சிறப்புக்கருதியும் திருக்குறளின் சிறப்புக் கருதியும் தமிழுக்குக் கதி என இவ்விரு நூல்களையும் கூறுவர். பாலகாண்டம் அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம்,கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்தகாண்டம் என ஆறு காண்டங்களை உடையது.

6. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

அ. பொன்னும் பவளமும் , முத்தும் மாணிக்கமும் தோன்றும் இடங்களால் வேறுபட்டாலும் மாலையாகக் கோர்த்து மதிப்பு மிக்க அணிகலனாக அமைக்கும் போது, தம்முள் ஒருங்கு சேரும் தன்மையுடையது அதைப் போல

ஆ.சான்றோர்கள் என்றும் சான்றோர் பக்கமே இருப்பர். சான்றாண்மை இல்லாதவர் தீயவர் பக்கமே சேர்வர்.

7. தண்ணீர்ப் பந்தலைக் கண்டு நாவுக்கரசர் வியப்புறக் காரணம் என்ன? அப்பூதியடிகளாரிடம் அவர் யாது வினவினார்?

அ.தண்ணீர்ப் பந்தலில் தம் பெயர் இருக்கக் கண்டு வியப்புற்றார்.

ஆ. அப்பூதியடிகளிடம் "கங்கையைச் சடைமுடியில் தாங்கிய சிவபெருமானின் அடியார்களுக்காக ஊரெல்லையில், நீவிர் வைத்த தண்ணீர்ப் பந்தலில் உம்பெயர் எழுதாமல் வேறு ஒருவர் பெயர் எழுதிய காரணமென்ன? "சொல்வீராக" என்று குற்றமற்றவராகிய திருநாவுக்கரசர் வினவினார்.

8. பெரியாரது இலக்கணம் யாது?

அ. அறநெறியை அறிந்து அறிவில் தெளிந்த முதிர்ச்சியுடையோர் நட்பினை ஆராய்ந்தறிந்து ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

ஆ. தமக்கு வந்துள்ள துன்பத்தைப் போக்கி இனி, மேலும் துன்பம் வராதவாறு முன்னதாகவே காக்கும் தன்மை உடையாரைப் போற்றி நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

9. பொருளீட்டும் நெறியினைத் திருவள்ளுவர் எங்ஙனம் கூறுகிறார்?

அ. பிறருக்குத் தீங்கின்றி நல்வழியில் ஈட்டிய பொருள், அறத்தினையும் கொடுக்கும் இன்பத்தினையும் தரும்.

ஆ. அருளும் அன்பும் பொருந்தாமல் பிற வழியில் வரும் செல்வத்தினைப் பற்றாமல் நீக்குதல் வேண்டும்.

இ. அரசுரிமையால் வந்த பொருளும், மக்கள் வழியாகத் தரும் பொருளும் பகைவரை வென்று கொண்ட திறைப் பொருளும் அரசனுக்குரிய பொருள்களாகும்.

10. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?

அ. புலியானது கூர்மையான நகங்களை உடைய சிங்கக் கூட்டங்கள் அன்றி, மற்ற விலங்குகளின் இறைச்சியை உண்ணும்.

ஆ. பெரிய பனைபோலும் தும்பிக்கையினையும் மூன்று மதங்களையுடைய யானைகளின் கொம்புகளைப் பிடித்து இழுத்து, அவற்றின் மார்பினைக் கீறி குருதியினைக் குடித்து உறங்காது நின்று, அரிய பெரிய மலைகளும் அதிருமாறு இடியைக் காட்டிலும் அதிகமாக முழங்கும்.

11. கலம்பகம் குறிப்பு வரைக.

1.தொண்ணுற்றாறு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று.

2. பலவகைப் பொருள்களைப் பற்றிப் பலவகைப் பாடல்களைக் கலந்து இயற்றப்பெறும் நூல் கலம்பகம் எனப்படும்.

3. பதினெட்டு உறுப்புகளைக் கொண்டது. கலம் + பகம். கலம் = பன்னிரெண்டு, பகம் = ஆறு.

4. புறவகுப்பு, அம்மானை, கார், ஊசல், இரங்கல், மறம்,தழை, தவம், சிந்து, பாண், கைக்கிளை, தூது, வண்டு, குறம், காலம், மாதங்கி, களி, சம்பிரதம் - கலம்பகம் எனப் பெயர் வந்தது.

12. குலசேகர ஆழ்வார் திருவித்துவக்கோட்டு இறைவனிடம் வேண்டுவது யாது?

மீன்கள் நீந்துகின்ற வயல்கள் சூழ்ந்த வித்துவக் கோட்டில் உள்ள பெருமானே! நீ எனக்குத் திருவருள் புரியவில்லை என்றாலும், உன்னையே அடைக்கலமாகப் புகுவேன். அன்றி எனக்கு வேறு ஒரு பற்றுதலுமில்லை.

மன்னவன் ஒருவன் செங்கோல் முறை தவறித் துன்புறுத்தினாலும், அவனுடைய ஆட்சியையே எதிர்நோக்கி வாழ்கின்ற குடிமக்களைப் போல, நான் உன் திருவடிகளையே எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

13. 'சாதனைப் பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?

அ. இன்று ஓய்வெடுத்து நாளை செல்லலாம் என்று எண்ணினால், ஓர் இரவுக்குள் வழிதடத்தில் என்னென்ன நேருமோ பணியை முடித்து ஓய்வு பெறுக, தம்பி இனிக்கும் செய்திகள் உன் மனத்தில் வந்து குவியும்.

ஆ.செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை செடியின் வெற்றி பூவில் உள்ளதைப் போல், உன் வெற்றிகளால் துன்பங்கள் யாவும் ஓடிவிடும்.

**வினா எண் : 45. செய்யுள் வினா விடை**

1. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:

குட்டிக் செவியறுத்துக் கட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக்களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி
வளர்ந்தனை பால் முந்திரிகை வாழைக்கனியாய்க்
கிளர்ந்தகரும் பாய்நாளிகேரத்து - இளங்கனியாய்க்

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது? - தமிழ் விடு தூது
2. இப்பாடலின் ஆசிரியர் பெயர் யாது? - ஆசிரியர் பெயர் அறியவில்லை
3. இப்பாடலில் இடம் பெற்றுள் அடியெதுகைகளை எடுத்து எழுதுக.
   குட்டிச் வளர்ந்தனை
   வெட்டிக் கிளர்ந்த
4. செவியறுத்து - பிரித்து எழுதுக. செவி + அறுத்து
5. நாளிகேரம் பொருள் தருக. தேங்காய்

2. தித்திக்குந் தெள்ளமுதாய் தெள்ளமுதின் மேலான

முத்திக் கனியே என் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படுந்தேனே உன்னோ டுவந்துரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? தமிழ்விடுதூது
2. முத்தமிழ் - இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.
   மூன்று தமிழ் : இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.
3. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
   தித்திக்குந் உண்ணப்
   முத்திக் விண்ணப்பம்
4. உவந்துரைக்கும் பிரித்தெழுதுக.
   உவந்து + உரைக்கும்
5. விளம்பக்கேள் பொருள் தருக.
   சொல்வதைக் கேட்பாயாக

3. அரியா சனமுனக்கே யானால் - உனக்குச்

சரியாரும் உண்டோ தமிழே - விரிவார்
திகழ்பா ஒரு நான்குஞ் செய்யுள் வரம்பாகப்
புகழ்பா வினங்கள்மடைப்போக்கா

1. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது? தமிழ் விடு தூது
2. அரியாசனம் பொருள் தருக. அ. சிங்காதனம்
3. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
   அரியா திகழ்பா
   சரியாரும் புகழ்பா
4. பாவினங்கள் - பிரித்து எழுதுக. பா+இனங்கள்
5. வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன யாவை?
   வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா ஆகிய நான்கும் வயலின் வரப்புகளாகும்.

4. நல்லேரினால் செய்யுள் நாற்கரணத் தேர்பூட்டிச்

சொல்லேர் உழவர் தொகுத்தீண்டி - நல்லநெறி
நாலே விதையா நனிவிதைத்து நாற்பொருளும்
மேலே பலன்பெறச்செய் விக்குநாள்

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? தமிழ்விடுதூது
2. நல்லேரினால் - பிரித்து எழுதுக. நன்மை + ஏரினால்
3. சொல்லேர் உழவர் யார்? புலவர்கள்

4. நாற்கரணத்து ஏர்கள் யாவை?
மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் நாற்கரணத்து ஏர்கள் ஆகும்.
5. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
நல்லேரி, நாலே, சொல்லேர், மேலே.

5. நிதிதரு கவிகையும் நிலமகள் உரிமையும்
இவைவை யுடை நந்தி
மதியிலி அரசர் நின் மலரடி பணிகிலர்
வானகம் ஆள்வாரே
1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? நந்திகலம்பகம்
2. கவிகை என்பதன் பொருள் யாது? குடை
3. மலரடி என்பதன் இலக்கணக்குறிப்பு யாது? உவமைத்தொகை
4. இப்பாடலில் இடம் பெற்றுள்ள மோனைகளை எடுத்தெழுதுக.
நிதிதரு - நிலமகள்
மதியிலா - மலரடி
5. வானகம் ஆள்வாரே - எவர்? அறிவில்லாத அரசர்

6. மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துக்கோட் டம்மா என்
பானோக்கா யாகிலுமுன் பற்றலலால் பற்றில்லேன்
தானோகா தெத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோனாக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே
1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் யாது? நாலாயிரத் திவ்யப் பிரபந்தம்
2. இந்நூலின் ஆசிரியர் யார்? குலசேகர ஆழ்வார்
3. கோனாக்கி - பிரித்து எழுதுக. கோன்+நோக்கி
4. தார்வேந்தன் - பொருள் தருக. மாலையணிந்த அரசன்
5. வாழும் குடி - இலக்கணக் குறிப்பு தருக. பெயரெச்சம்

7. பாத்தனதாக் கொண்டபிள்ளைப் பாண்டியன் - வில்லி ஒட்டக்
கூத்தனிவர் கல்லாது கோட்டிகொளும் - சீத்தையரைக்
குட்டிச் செவியறுத்துக் கூட்டித் தலைகளெல்லாம்
வெட்டிக் களைபறிக்க மேலாய்த்தூர் - கட்டி
1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? தமிழ் விடுதூது
2. இப்பாடலில் குறிப்பிடப்படும் புலவர்கள் யாவர்?
அதிவீரராம பாண்டியன், வில்லிபுத்தூரார், ஒட்டக்கூத்தர்
3. செவியறுத்து - பிரித்து எழுதுக. செவி+அறுத்து
4. சீத்தையர் என்பதன் பொருள் யாது? கீழானவர்
5. இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடியெதுகைகளை எழுத்து எழுதுக.
பாத்தனதா குட்டிச்
கூத்தனிவர் வெட்டிக்

8. அறிவெனப் படுவது பேதையார் சொல் நோன்றல்
செறிவெனப்படுவது கூறியது மறாஅமை
நிறையெனப் படுவது மறைபிறர் அறியாமை
முறையெனப் படுவது கண்ணோடாது உயிர்வௌவல்
பொறையெனப் படுவது போற்றாரைப் பொறுத்தல்
1. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது? கலித்தொகை
2. இப்பாடலின் ஆசிரியர் யார்? நல்லந்துவனார்
3. அறிவெனப்படுவது யாது?
அறிவில்லாதவர்களின் சொல்லைப் பொறுத்தல்
4. பொறை என்பதன் பொருள் யாது? பொறுமை
5. பொறுத்தல் என்பதன் இலக்கணக் குறிப்பு யாது? தொழிற்பெயர்

9. பொங்குகடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர் பெருமை
அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே
மங்லமாம் திருவேடத் துடனின்றிவ் வகைமொழிந்தீர்
எங்குறைவீர் நீர்தாம்யார் இயம்புமென இயம்பினார்

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? பெரிய புராணம்
2. இப்பாடலின் ஆசிரியர் யார்? சேக்கிழார்
3. புவனம் என்பதன் பொருள் யாது? உலகம்
4. இப்பாடலில் இடம் பெற்றுள் அடியெதுகைகளை எடுத்தெழுதுக.
   பொங்குகடல், அங்கணர்த ம்
5. பொங்குகடல் - இலக்கணக் குறிப்பு தருக. வினைத்தொகை

10. நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை

1. இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல் எது? தேவாரம்
2. இப்பாடலின் ஆசிரியர் யார்? திருநாவுக்கரசர்
3. ஏமாப்பு என்பதன் பொருள் யாது? பாதுகாப்பு
4. பிணிறிவோம் - பிரித்து எழுதுக. பிணி+அறிவோம் - பிணியளியோம்.
5. பணிவோம் என்பதன் இலக்கணக்குறிப்பு தருக.
   தன்மைப் பன்மை வினைமுற்று

## நெடுவினா - செய்யுள் பகுதி வினா எண் : 47

**கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளி:**

1. தேரா மன்னா என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?
   1. புறாவின் துன்பத்தைப் போக்கியவன் சிபி மன்னன்
   2. பசுவின் துயரம் போக்க தன் மகனையே தேர்ச்சக்கரத்தில் இட்டுக் கொன்றவன் மனுநீதிச்சோழன்
   3. நீதி தவறாத மன்னர்கள் பிறந்த புகார் நகரம் நான் பிறந்த ஊர்.
   4. மாசாத்துவன் மகன் கோவலனை மணம் புரிந்தேன்
   5. ஊழ்வினைப் பயனால் என் காற்சிலம்பினை விற்க முயன்று உன்னால் கொலை செய்யப்பட்டோன்.
2. கண்ணகிக்கும் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்கும் இடையே நடந்த நிகழ்வை உரையாடலாக அமைத்து எழுதுக.

பாண்டியன் : கையில் சிலம்பும் கண்ணில் நீருமாக என் முன்னே வந்து நிற்கும் பெண்ணே நீ யார்?

கண்ணகி : ஆராய்ந்து அறிந்து நீதி வழங்காத மன்னனே! புறாவின் துயர் போக்கிய சிபி மன்னனும் பசுவின் துயர் போக்கிய மனுநீதிச்சோழனும் ஆண்ட புகார் நகரமே என் ஊர். என் கால் சிலம்பு விற்க முயன்று உன்னால் கொலை செய்யப்பட்ட கோவலன் மனைவி நான். கண்ணகி என்பது என் பெயர்.

பாண்டியன்: கள்வனைக் கொலை செய்தல் கொடுங்கோலன்று ; அரசநீதி

கண்ணகி : அறநெறியில் நில்லா அரசனே! என் கால் சிலம்பு மாணிக்கப் பரல்களைக் கொண்டது.

பாண்டியன்: நீ கூறியது நன்று. எம்முடைய சிலம்பின் பரல்கள் முத்துக்களே ( யாரங்கே கோவலனிடமிருந்து கைப்பற்றிய சிலம்பினைக் கொண்டு வாருங்கள்)

3. பெரியாரை துணையாகக் கொள்வதன் இலக்கணம், அதனால் வரும் சிறப்பு, பெரியார் துணையில்லா வழி ஏற்படும் இழிவு ஆகியன குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

<u>இலக்கணம்:</u>

1. அறிவில் தெளிந்த பெரியோரது நட்பினை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.
2. துன்பம் வருமுன் காக்கும் தன்மை கொண்ட பெரியாரை நட்பாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

<u>சிறப்பு:</u>

3. பெரியாரைப் போற்றி உறவாகக் கொள்ளுதலே கிடைத்தற்கரிய செல்வமாகும்.

4. தம்மைக் காட்டிலும் அறிவில் சிறந்த பெரியோரை உறவினராய் ஏற்று நடத்தலே வலிமைகளுள் எல்லாம் சிறந்த வலிமை ஆகும்.

5. தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் பெரியோர்களைத் தேர்ந்து நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.

இழிவு:

6. குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியோரின் துணையில்லா அரசன். தன்னைக் கெடுக்கும் பகைவர் இல்லாமலே தானே கெடுவான்.

7. முதலீடு இல்லாத வணிகர்க்கு அதனால் வரும் ஊதியம் ஒன்றும் இல்லை. அதுபோல் தம்மைத் தாங்கிக் காப்பாற்ற பெரியோர் இல்லாதார் நிலத்து வாழ இயலாது.

8. நல்லவர் ஒருவரின் நட்பைக் கைவிடுவது, பலரைப் பகைத்துக் கொள்வதை விடப் பன்மடங்கு தீமை தரும்.

4. பொருளினது சிறப்பு, பொருளீட்டும் நெறி, பொருளீட்டுவதால் ஏற்படும் பயன்கள் குறித்து வள்ளுவர் கூறும் கருத்துக்களைத் தொகுத்தெழுதுக.

1. பொருள் உள்ளவரையே இவ்வுலகம் ஒரு பொருட்டாக மதிக்கும்

2. செல்வம் இல்லாதவரை எல்லோரும் இகழ்வர் செல்வம் உள்ளவரை எல்லோரும் சிறப்பிப்பர்.

பொருளீட்டும் நெறி:

4. பிறருக்குத் தீங்கின்றி நல்ல வழியில் சேர்த்த பொருள் அறத்தையும் இன்பத்தையும் தரும்.

5. அருளும் அன்பும் இல்லாமல் பிற வழியில் வரும் செல்வத்தை நீக்க வேண்டும்.

6.அரசு உரிமையால் வந்த பொருள் மக்கள் வரியாகத் தரும்பொருள் பகைவனை வெற்றி கொண்டு பெற்ற பொருள் அரசனுக்கு உரியவை.

பயன்கள்:

7. அன்பு என்னும் தாய் பெற்ற அருள் என்னும் குழந்தை, பொருள் என்னும் வளர்ப்புத் தாயால் வளாக்கப்படும்.

8. தன் கையில் ஒரு பொருளை வைத்துக் கொண்டு ஒரு செயலைத் தொடங்குதல் மலை உச்சியில் நின்று யானைச்சண்டை பார்ப்பது போன்றதாகும்.

9. பொருளைத் தேடிச் சேர்க்க வேண்டும். அதுவே பகைவரின் செருக்கினை அறுக்கும் கூர்மையான ஆயுதம்.

10. சிறந்த பொருளை நல்வழியில் சேர்த்தவருக்கு அறமும் இன்பமும் ஒரு சேரக் கிடைக்கும்.

வினா எண் : 49

மனப்பாடப் பகுதி அனைத்தும் படித்துப் பயிற்சி செய்தல் வேண்டும்.

## பகுதி - 3
## வினா எண் : 13 லிருந்து 16 வரை

**பொருத்துக:**

I.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1.விரை | - | உடல் |
| 2. கழல் | - | பெருகி |
| 3. ததும்பி | - | மணம் |
| 4. மெய் | - | அணிகலன் |

விடை : 1. மணம் 2. அணிகலன் 3. பெருகி 4. உடல்

II.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. புகார்காண்டம் | - | 13 காதைகள் |
| 2. மதுரைக் காண்டம் | - | 7 காதைகள் |
| 3. வஞ்சிக்காண்டம் | - | 10காதைகள் |

விடை : 1. 10 காதைகள் 2. 13 காதைகள் 3. 7 காதைகள்

III.

| சொல் | | பொருள் |
|---|---|---|
| 1. இடர் | - | நிலவு |
| 2. நாவாய் | - | துன்பம் |
| 3. இறை | - | படகு |
| 4. இந்து | - | தலைவன் |

விடை: 1. துன்பம் 2. படகு 3. தலைவன் 4. நிலவு

IV. <u>சொல்</u> <u>பொருள்</u>

1. செறு - பனையோலைப் பெட்டி
2. வித்து - புதுவருவாய்
3. யாணர் - விதை
4. வட்டி - வயல்

விடை: 1. வயல் 2. விதை 3. புதுவருவாய் 4. பனையோலைப் பெட்டி

V. <u>சொல்</u> - <u>பொருள்</u>

1. மேதி - சிவன்
2. சந்தம் - எருமை
3. கோதில் - அழகு
4. அங்கணர் - குற்றமில்லாத

விடை: 1. எருமை 2. அழகு 3. குற்றமில்லாத 4. சிவன்

VI. <u>சொல்</u> <u>பொருள்</u>

1. கான் - கரடி
2. உழுவை - சிங்கம்
3. மடங்கல் - புலி
4. எண்கு - காடு

விடை: 1.காடு 2. புலி 3. சிங்கம் 4. கரடி

VII. <u>சொல்</u> - <u>பொருள்</u>

1. பண்பு - கூறியது மறா அமை
2. அன்பு - பேதையார் சொல் நோன்றல்
3. அறிவு - தன் கிளை செறா அமை
4. செறிவு - பாடறிந்து ஒழுகுதல்

விடை:

1. பாடறிந்து ஒழுகுதல் 2. தன்கிளை செறா அமை 3. பேதையார் சொல் நோன்றல்
4. கூறியது மறா அமை

**வினா எண் : 1 - 12 (உரைநடை)**

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1. இன்றைய மதுரையில் _________ தமிழ்ச் சங்கம் இருந்தது.
   1.<u>மூன்றாம்</u> 2. இரண்டாம் 3. முதலாம்
2. பதினாறு செவ்வியல் தன்மைகளைக் கொண்டது செம்மொழி எனக் கூறியவர்.
   1. திரு.வி.க 2. உ.வே.சா 3. <u>பாவாணர்</u>
3. பெண் அடிமை ஆனதற்கு உரிய காரணங்கள் ஒன்று _______ இல்லாமை.
   1. வாக்குரிமை 2. பேச்சுரிமை 3. <u>சொத்துரிமை</u>
4. அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்றும் போது நம் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றவர்
   1. திரு.வி.க 2. <u>பெரியார்</u> 3. பாரதிதாசன்
5. மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் _________ பேராசிரியராகப் பணியாற்றினார்.
   1. வாணிகவியல் 2. அறிவியல் 3. <u>பொருளியல்</u>
6. அம்பேத்கருக்கு இந்திய அரசு வழங்கிய விருது_________
   1. பத்மஸ்ரீ 2. <u>பாரதரத்னா</u> 3. பத்ம விபூஷன்
7. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை ________
   1. ஓவியக்கலை 2. இசைக்கலை 3. <u>பேச்சுக்கலை</u>
8. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்தவர் _________
   1. <u>பேரறிஞர் அண்ணா</u> 2. மு. வரதராசனார் 3. திரு.வி.க

9. “பண்ணொடு தமிழொப்பாய்” எனத் தொடங்கம் பாடல் இடம்பெறும் நூல்
   1. திருவாசம் 2. திருக்குறள் 3. தேவாரம்
10. உலகம் என்னும் தமிழ்ச் சொல் __________ என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது
   1. உலகு 2.உலவு 3. உளது
11. தமிழர்கள் நிலத்தை ______வகையாகப் பிரித்துக் காட்டியிருக்கிறார்கள்.
   1. மூன்று 2. ஆறு 3. ஐந்து
12. காந்தியடிகள் ________ நாடகத்தைப் பார்த்து உண்மையே பேச வேண்டும் என்று உறுதி பூண்டார்.
   1. சிரவணபிதுர்பத்தி 2. அரிச்சந்திரன் 3. பக்தப் பிரகலாதன்
13. பகைவனிடமும் அன்பு காட்டு எனக் கூறிய நூல் _______
   1.பகவத் கீதை 2. நன்னூல் 3. பைபிள்
14. அறநெறியாகப் போற்றப்பட வேண்டியவை_______
   1.ஆடம்பரம், வீண்செலவு 2.எளிமை, சிக்கனம் 3. அன்பு, அருள்
15. “உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்” எனத் தொடங்கும் பாடல் இடம் பெற்றுள்ள நூல்
   1. கந்தபுராணம் 2. சீறாப்புராணம் 3. பெரிய புராணம்
16. வள்ளலாரின் இயற்பெயர் ________
   1. சம்பந்தர் 2. இராமலிங்கர் 3. தாயுமானவர்
17. பெரும்பாலான பணிகளுக்கு அடிப்படை தகுதி
   1. பத்தாம் வகுப்பு 2. பன்னிரண்டாம் வகுப்பு 3.எட்டாம் வகுப்பு
18. ‘விரல்கள் பத்தும் மூலதனம்’ என்னும் பாடலின் ஆசிரியர்_________
   1. பாரதியார் 2.பாரதிதாசன் 3. தாராபாரதி

## பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. தமிழர் மனித வாழ்வை அகம் புறம் எனப் பிரித்தனர்.
2. குமரி கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி தமிழ்மொழி
3. தமிழ் மிகவும் பண்பட்ட மொழியெனக் கூறிய மொழியியல் அறிஞர் மாக்சு முல்லர் ஆவார்.
4. தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு.
5. பெரியார் சமூக முரண்களை எதிர்த்தவர் மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்.
6. வெறும் பேச்சுக்கும் மேடைப் பேச்சுக்கும் வேறுபாடு உண்டு.
7. பேச்சு முடிவில் சுருக்கத்தைக் கூறிக் கருத்தினை நிலை நாட்டி முடித்தல்
8. நடிப்பாற்றல் மிக்கவரையும் நடிப்பைக் கற்றுத் தருபவரையும் இயக்குநர் என அழைப்பர்.
9. படப்பிடிப்புக் கருவியை நகர்த்தும் வண்டியில் பொருத்துவதும் உண்டு.
10. இயங்குரு படங்கள் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருக்கும்.
11. இலெமூரியாவை மனித நாகரிகத் தொட்டில் என்பர்.
12. தனக்குவமையில்லா ஒரு தனி இனம் தமிழ் இனம்.
13. காந்தியடிகள் சிரவண பிதுர்பத்தி என்னும் நாடக நூலைப் படித்தார்.
14. திருக்குறளை மொழி பெயர்த்த உருசிய அறிஞர் தால்சுதாய்
15. இராமலிங்கர் சத்திய தருமச் சாலையை நிறுவிய இடம் வடலூர்.
16. இராமலிங்கர் தமிழ் மொழியே இறவாத நிலை தரும் என்று கருதினார்.
17. சங்க காலத்தில் பெண்கள் கடல் கடந்து செல்லக் கூடாது.
18. நாள்தோறும் கல்வியில் புதுப்புதுத்துறைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன.
19. காவலர் இராணுவம் போன்ற பணிகளுக்கு உடற்கூறு தேர்வும் எழுத்துத் தேர்வும் உண்டு.

## பகுதி - 3 வினா எண் 13-16

**பொருத்துக:**

VIII. 1.ஈஸ்ட்மன் - ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவி
   2. எடிசன் - படச்சுருள்

3. எட்வர்டு பிரிட்சு - கருத்துப்படம்
4. வாலட் டிஸ்னி - இயக்கப்படம்
விடை:
ஈஸ்ட்மன் - படச்சுருள்
எடிசன் - ஒருவர் மட்டும் பார்க்கும் கருவி
எட்வர்டு மை பிரிட்சு - இயக்கப்படம்
வால்ட் டிஸ்னி - கருத்துப்படம்

IX. 1. சத்திய சோதனை - திருவள்ளுவர்
2. பகவத் கீதை - கிறித்துவ சமய நூல்
3. திருக்குறள் - காந்தியடிகள்
4. பைபிள் - இந்து சமய நூல்
விடை :
சத்திய சோதனை - காந்தியடிகள்
பகவத்கீதை - இந்து சமய நூல்
திருக்குறள் - திருவள்ளுவர்
பைபிள் - கிறித்துவ சமய நூல்

X. 1.வினையே ஆடவர்க்குயிர் - தாராபாரதி
2. முந்நீர் வழக்கம் மகடூ உ வோடில்லை - குறுந்தொகை
3. உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேன் - தொல்காப்பியர்
4. விரல்கள் பத்தும் மூலதனம் - திருமூலர்
விடை:
வினையே ஆடவர்க்குயிர் - குறுந்தொகை
முந்நீர் வழக்கம் மகடூ உ வோடில்லை - தொல்காப்பியர்
உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே - திருமூலர்
விரல்கள் பத்தும் மூலதனம் - தாராபாரதி

## பகுதி - 4

**விடைக்கேற்ற வினாத்தொடர் அமைக்க: வினா எண் 17-20.**

1. பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
விடை: பெரியா எதை விரும்பினார்?
2. பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்?
விடை: பெரியார் எதை ஏற்க மறுத்தார்?
3. செய்திப் படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டு களிக்கலாம்.
அ. எப்படங்கள் வாயிலாக நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்?(அ)
விடை: ஆ. நிகழ்வுகளை நாம் எதன் வாயியலாக கண்டு களிக்கலாம்?
4. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகின்றது.
விடை: திரையரங்குகளில் திரைப்படம் காட்ட எக்கருவி பயன்படுகின்றது?
5. திரைப்படம் எடுப்பதனைவிடச் செய்திப்படம் எடுப்பது கடினமான பணியாகும்.
விடை: எப்படம் எடுப்பது கடினமான பணியாகும்?
6. தமிழர்கள் அரபு நாட்டுடனும் யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.
விடை: யாருடன் தமிழர்கள் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்?
7. <u>வினாத் தொடர் அமைக்க:</u>
காந்தியடிகள், பல கோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.
விடை: காந்தியடிகள் எதை வாழ்வாதாரம் என்று கருதினார்?
8. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், தெய்வப் பற்றும் வளரும் வகையில் கல்வி

அமைதல் வேண்டும்.

விடை: இளைஞர்களின் உள்ளத்தில் கல்வி எவ்வாறு அமைதல் வேண்டும்?

9. இளங்கலைப் பட்டம் பெற்றவர்கள், இளங்கலை கல்வியியல் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.

விடை: பட்டதாரி ஆசிரியர் பணியில் யார் சேரலாம்?

10. தொழில் நுட்பப் பயிலகத்தில் பயில்வோர்க்கு நிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன.

விடை: எப்பயிலகத்தில் பயில்வோர்க்குநிறைய வேலை வாய்ப்புகள் உள்ளன?

## பிரிவு - II

## பகுதி - 1

### உரைநடை : குறுவினா இரண்டு மதிப்பெண் வினா எண் : 28 - 34

**கீழ்க்காணும் வினாக்களுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:**

1. உலகில் உள்ள மொழிகளுள் இலக்கிய இலக்கண வளமுடைய மொழிகள் எத்தனை?

விடை : மூவாயிரம்

2. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?

“இன்றைய மொழியியல் வல்லுநர்கள் பேணிப் பின்பற்றத்தக்க வழி முறைகளைத் தொல்காப்பியம்” கூறியுள்ளது என எமினோ கூறுகின்றார்.

3. பெரியாரின் பெண் விடுதலைச் சிந்தனைகளை எவ்வாறு பகுக்கலாம்?

1. அடிப்படைத் தேவைகள் 2. அகற்றப்பட வேண்டியவை

4. அம்பேத்கார் எங்கு எப்போது பிறந்தார்?

மராட்டிய மாநிலத்தில் கொங்கண் சிற்றூரில் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 14 ஆம் நாள் பிறந்தார்.

5. அம்பேத்கரின் பெற்றோர் யாவர்?

இராம்ஜி சக்பால், பீமாபாய்

6. அம்பேத்கருக்கு ‘பீம்’ என பெயர் வைக்க காரணம் என்ன?

மகாபாரதப் பீமனைப் போலவே தன் மகனும் எவரும் அசைக்க முடியாத வீரனாக வர வேண்டும் என்ற எண்ணத்தில் பீம் எனப்பெயர் சூட்டினார்.

7. பீமாராவ் தம் பெயரை அம்பேத்கார் என மாற்றிக் கொள்ளக் காரணம் யாது?

தம் ஆசிரியர் மேல் கொண்ட பற்றின் காரணமாய் அம்பேத்கர் என்று மாற்றி அமைத்துக் கொண்டார்.

8. அம்பேத்கர் குறித்து நேரு புகழ்ந்து கூறியது யாது?

ஆசியாக் கண்டத்திலேயே மிகப்பெரிய தனியாள் நூலகத்தை அமைத்த பெருமை இவரையே சாரும் என்று நேரு கூறினார்.

9. மேடைப் பேச்சில் மக்களை ஈர்த்த நால்வர் யார்?

1. திரு.வி.க 2. அறிஞர் அண்ணா 3. ரா.பி. சேதுப்பிள்ளை 4. பாரதியார் 5. குன்றக்குடி அடிகளார்

10. பேச்சின் முக்கூறுகள் யாவை?

1. எடுத்தல் 2. தொடுத்தல் 3. முடித்தல்

11. மொழி மாற்றம் என்றால் என்ன?

ஒரு மொழிப்படத்தை மற்ற மொழியில் மாற்றியமைக்கும் முறையை மொழி மாற்றம் என்பர்

12. கல்விப் படங்கள் வாயிலாக நாம் அறிவன யாவை?

பல வகை விலங்குகளின் வாழ்க்கை பன்னாட்டு மக்களின் வாழ்க்கை முறை நேரில் காண முடியாப் பல இடங்களைப் பற்றிய காட்சிகளை நாம் அறியலாம்.

13. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?

1. குமரி மலை 2. பஃறுளியாறு

14. ஏற்றுமதி இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

1. பட்டினப் பாலை 2. மதுரைக் காஞ்சி

15. ஞாலம் - பெயர்க் காரணம் கூறுக.

ஞால் என்றால் தொங்குதல் என்பது பொருள். எவ்வித பற்றுக்கோடுமின்றி அண்டவெளியில் உலகம் தொங்கிக் கொண்டிருக்கிறது.

16. காந்தியடிகளைக் கவர்ந்த குஜராத் பாடலின் கருத்து யாது?
"தாகாத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை; தீமை செய்தவர்க்கும் நன்மையே செய்; அதில் தான்உண்மைப் பொருண்மை உண்டு என்றார்.
17. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாய் அமைந்த உயர்பண்புகள் யாவை?
1. அன்பு 2. உண்மை 3. உறுதி 4. இன்னாசெய்யாமை ஆகும்.
18. காந்தியடிகளின் அறவழிப் போராட்டத்தில் உருவான இயக்கங்கள் யாவை?
1. கதர் இயக்கம் 2. மதுவிலக்கு 3. தீண்டாமை ஒழிப்பு
19. எவற்றை அற நெறியாகப் போற்ற வேண்டும் என்று காந்தியடிகள் கூறினார்?
1. எளிமை 2. சிக்கனம்
20. இராமலிங்கர் எங்கு எப்போது பிறந்தார்?
கடலூர் மாவட்டம் சிதம்பரம் வட்டத்தில், மருதூரில் 5.10.1823 இல் இராமையா சின்னம்மை இணையர்க்கு 5 ஆம் மகவாக இராமலிங்கர் பிறந்தார்.
21. சத்திய தருமச்சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது?
சாதி மத வேறுபாடு இன்றிப் பசித்தோர்க்கு எல்லாம் உணவிடும் தொண்டைச் செய்தார்.
22. ஒவ்வொருவரும் குறைந்தது எக்கல்வித் தகுதியினைப் பெறுதல் வேண்டும்?
+2 - கல்வித் தகுதியினைப் பெறுதல் பேண்டும்.
23. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில் நுட்பத் துறைகள் யாவை?
1. உயிரித் தொழில் நுட்பத்துறை 2. நுண்ணியல் தொழில் நுட்பத்துறை
24. பட்டப்படிப்புகளில் எவையேனும் நான்களை எழுதுக.
தமிழ், ஆங்கிலம், இளங்கலை (பி.ஏ) அறிவியல், கணிதம் இளங்கலை (பி. எஸ்.ஸி)
25. இடைநிலை ஆசிரியர் பயிற்சி குறித்து எழுதுக.
மேல்நிலைக்கல்வி தேர்ச்சி பெற்றவர்கள், இடைநிலை ஆசிரியர் கல்விப் பயிற்சி இரண்டு ஆண்டுகள் படித்துத் தேர்ச்சி பெறுவதுடன், ஆசிரியர் தகுதித் தேர்விலும் தேர்ச்சி பெற்றால் இடைநிலை ஆசிரியராகப் பணியில் சேரலாம்.

## பகுதி - 2

### உரைநடை சிறுவினா நான்கு மதிப்பெண் வினா எண் : 40 - 44

**கீழ்க்காணும் வினாக்களுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளி:**

1. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.
1. தமிழ் இயல், இசை, நாடகம், என்கிற முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.
2. தமிழர் அகம், புறம் என வாழ்வியலுக்கு இலக்கணம் வகுத்தனர்
3. இறவா இலக்கிய இலக்கண வளமுடையது.
4. பழமையும், பெருமையும் பெற்றுள்ளது.
2. மொழிக்குரிய செவ்வியல் தன்மைகள் யாவை?
1. தொன்மை, முன்மை, நுண்மை,திண்மை, எண்மை, ஒண்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, தாய்மை, தூய்மை, மும்மை, செம்மை, இயன்மை, வியன்மை ஆகும்.
3. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?
தமிழர்களிடம் இன்று பரவியுள்ள பெருநோய் ஒன்று உண்டு. அதுவே மணக்கொடை பெற்றோர் பலர் தம் மகனின் கல்விக்காகப் பணம் செலவழிப்பதனைத் தங்கள் கடமையைச் சேர்ந்தது எனக் கருதாது, அதை ஏதோ ஒரு தொழிலில் போட்ட முதலீடாகவே கருதினர். அந்த முதலீட்டை வட்டியுடன் சேர்த்தே அவனுக்கு வரப்போகின்ற மனைவி மூலம் பெறுவதே மணக்கொடை ஆகும்.
4. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள் யாவை?
அம்பேத்கர் 1908 இல் எல்பின்ஸ்டன் பள்ளியில் தம் உயர் நிலைப்பள்ளிப் படிப்பை முடித்தார். 1912 இல் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம் பெற்றார்.1915 இல் அமெரிக்கக் கொலம்பியா பல்கலைக் கழகத்தில் முதுகலைப் பட்டம்,1916ல்இல் இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டமும், அறிவியலில் முதுகலை, பாரிஸ்டர் பட்டமும் பெற்றார்.
5. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

பேச்சை முடிக்கும் போது தான் பேச்சாளர் தமது கருத்தை வற்புறுத்தவும், கேட்போர் மனதில் பதியுமாறு சுருக்கிக் கூறவும் கூடும் சுருக்கத்தைக் கூறி முடித்தல், பாராட்டி முடித்தல் கவிதையைக் கூறி முடித்தல், உணர்ச்சியைத் தூண்டும் முறையில் முடித்தல். சிறந்த பேச்சாளர் எப்படி முடித்தாலும் அழகுறவே அமையும்.

6. கருத்துப்படம் பற்றி விளக்கு எழுதுக.

கருத்துப்படம் அமைக்கத் தொடங்கியவர் 'வால்ட் டிஸ்னி' என்பவர் ஆவார். அவர் ஓவியர். ஒரே செயலைக் குறிக்கும் பல்லாயிரக்கணக்கான படங்களை வரைவார். ஒன்றுக்கொன்று சிறிது சிறிதாக மாறுவனவாக இருக்கும். ஒவ்வொரு காட்சியிலும் வரும் விவரங்களையும், பின்னணியையும் தனித்தனியாக எழுதி ஒளிபுகும் செல்லுலாய்டு தகட்டில் தீட்டி திரைப்பட படப்பிடிப்புக் கருவியைக் கொண்டு இப்படங்களைப் படமாக்குவர். கதைக்கேற்ப ஒலிப்பதிவையும் செய்வர். படம் எழுதுவதற்கு பதிலாகப் பொம்மைகளைக் கொண்டும் படம் தயாரிக்கின்றனர்.

7. கடல் வாணிகம் குறித்து எழுதுக.

கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். பண்டைத் தமிழகத்தில் துறைமுகப் பட்டினங்கள் பலவிருந்தன. பூம்புகார் வணிகர் வாழும் நகரமாய் இருந்தது. கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும், மயில் தோகையும் சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன. அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும் வாசனைப்பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.தமிழர்களுக்குச் சாவக நாட்டுடன் கடல் வாணிகத் தொடர்பு இருந்தது.

8. அணு பற்றிய கம்பரின் கருத்து யாது?

இன்றைய அறிவியல் அணுவைப் பிளக்கவும் சேர்க்கவும் முடியும் என ஆய்ந்திருக்கிறது. ஔவை 'அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி' என்று சொல்கிறார். 'ஓர் அணுவினைச் சத கூறிட்ட கோணினும் உளன்' எனக் கம்பரும் கூறுவர். இதன் மூலம் அணுச் சேர்ப்பும் அணுப் பிரிப்பும் பற்றிய கருத்துகள் அன்றே அரும்பின.

9. காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் எது? விளக்குக.

அரிச்சந்திர நாடகம் உண்மையை மட்டுமே பேசும் அரசன் அரிச்சந்திரனை,ஒரு பொய் பேச வைக்க வேண்டும் என்பதற்காகவே பல இன்னல்களுக்கு உள்ளாக்குகிறார். முனிவர் விசுவாமித்திரர். அதனால் அரிச்சந்திரன் நாட்டையும் மனைவியையும் ஒரே மகனையும் இழக்கின்றான். சுடுகாட்டில் பணிபுரிகின்றான். முனிவர் பல்வேறு இன்னல்களை இழைத்தும் பொய் சொல்லேன் என்ற மறுமொழி கூறினான். அவனது வாய்மையை நாடகம் வாயிலாக உணர்ந்த காந்தி தாம் ஒரு சத்தியவானாக இருக்க வேண்டும் என உறுதி பூண்டார்.

10. இராமலிங்கரை 'உத்தம மனிதர்' என்று திகம்பர சாமியார் போற்றிய நிகழ்ச்சியை எழுதுக?

திருவொற்றியூர்ச் சன்னதி வீதியில் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்திருந்த திகம்பரசாமியார், அவ்வழியில் செல்லும் மனிதர்களைக் கண்டு "அதோ மாடு போகிறது; ஆடு போகிறது; நாய் போகிறது ;நரி போகிறது; என்று அவரவர்களின் குணத் தன்மைக் கேற்ப விலங்குகளின் பெயர்களால் கூறுவார். ஆனால் இராமலிங்கர் அவ்வழியே சென்ற போது இதோ ஓர் உத்தம மனிதர் போகிறார் என்று கூறினார்.

11. சுத்த சன்மார்க்க நோக்கங்கள் நான்கினை எழுதுக?

இறைவன்ஒருவனே, அவன் ஒளி வடிவானவன், இறைவனை அடைய சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை வடலூரில் நிறுவினார். சாதி மத சமய இன வேறுபாடு கூடாது. எவ்வுயிரையும் கொல்லக் கூடாது. புலால் உண்ணல் கூடாது. எல்லா உயிர்களையும் தம் உயிர் போல் எண்ணுதல் வேண்டும். மக்கள் அனைவரையும உடன் பிறப்பாய் நேசித்தல் வேண்டும்.

12. தொழில் நுட்ப கல்வி குறித்து எழுதுக?

பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் தாங்கள் பெற்ற உயர் மதிப்பெண்களுக்கு ஏற்பப் பல்வேறு தொழில் நுட்பக் கல்லூரிகளில் சேர்ந்து பயிலலாம். பொறியியல் துறைகளில் உள்ளவை போல் பல்வேறு துறைகள் இதிலும் உண்டு. இவற்றில் சேர்ந்து படிப்பவர்களுக்கு இக்காலத்தில் பல்வேறு தொழில் சார்ந்த வேலை வாய்ப்புகள் பெறுவதற்கு வாய்ப்பு உண்டு.

13. இராணுவம் காவல் முதலிய பணிகளில் சேர்வதற்கான கூறுகள் யாவை?

முதலில் உடற்கூறு தேர்வு நடைபெறும். திருமூலர் வாக்கிற்கேற்ப முறையான உடற்பயிற்சி மூலம் நல்ல உடல் தகுதி பெற்றவர்கள் எழுத்துத் தேர்விலும் வெற்றி பெறுவதே இதற்குரிய தகுதிக் கூறாகும். இவற்றில் தேர்ச்சி பெற்றவர்களே இப்பணியில் சேரலாம்.

## பிரிவு - IV

## வினா எண் : 46

**I. கீழ்க்காணும் உரைப்பகுதியைப்படித்து வினாக்களுக்கு விடையளி:**

1. 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' என்னும் வள்ளுவர் வாய் மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒரு நாடு வளத்துடன் இருக்க வேண்டுமானால் அந்நாட்டு மக்கள் அனைவரும் ஒத்த ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண் பெண் இருபாலார்க்கும் பொதுவாகும் என்பது அவர் தம் கருத்து. பெரியார் சமூக முரண்களை; எதிர்த்தவர் மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்; தொலை நோக்கு பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எதிர்த்தவர் ; சமூக மாற்றத்தை விரும்பியவர்; பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர். பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர் பெரியார் வழிகாட்டுதலால் தமிழகம் இன்று தலைநிமிர்ந்து நிற்கிறது.

   வினாக்கள்:

   1. பெரியார் எதை எதிர்த்தார்?

   விடை: சமூக முரண்களை எதிர்த்தார்.

2. சமூகத்தின் கண்கள் என்று பெரியார் யாரைக் குறிப்பிடுகின்றார்?
   பெண்கள் சமூகத்தின் கண்கள் என்று குறிப்பிடுகின்றார்.
3. ஒழுக்கம் யாருக்குப் பொதுவானது என்றார் பெரியார்?
   ஆண், பெண் இருவருக்கும் பொதுவானது என்றார் பெரியார்.
4. ஒழுக்கம் குறித்து வள்ளுவர் கூறுவது யாது?
   ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்றார்.
5. பெரியார் எப்பார்வையுடையவர்? தொலை நோக்குப் பார்வையுடையவர்.

**II.** அம்பேத்கர் மேலை நாடுகளில் கல்வி பயின்ற போது புகழ் வாய்ந்த பேராசிரியர் பலருடன் நட்புக் கொண்டிருந்தார். இவர் எழுதிய 'இந்தியாவின் தேசியப் பங்கு வீதம்' என்னும் நூலைப் பொருளாதாரத் துறையின் சிறந்த நூலகக் கருதிப் பொருளியல் வல்லுநர்களும் பேராசிரியர்களும் பெரிதும் மதித்துப் போற்றினார்கள். பொருளியலில் பெரும் புலமை பெற்று விளங்கியதால் பல்வேறு பொருளாதாச் சிக்கல்களை அணுகியும் நுணுகியும் ஆராய்ந்து பார்க்க அவரால் இயன்றது; தொழில் துறையில் பொருளாதார வளர்ச்சிப் பெற புதுப்புதுக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

வினாக்கள் - விடைகள்:

1. அம்பேத்கர் எங்கு கல்வி பயின்றார்?
   மேலை நாடுகளில்
2. அவர் யாருடன் நட்புக் கொண்டிருந்தார்?
   புகழ் வாய்ந்த பேராசிரியர்களுடன்
3. அவர் எழுதிய நூலின் பெயர் என்ன?
   "இந்தியாவின் தேசிய பங்கு வீதம்"
4. அவர் எதில் பெரும் புலமை பெற்று விளங்கினார்?
   பொருளியல்
5. தொழில்துறையில் பொருளாதார வளர்ச்சி பெற எதை வெளிப்படுத்தினார்?
   புதுப்புதுக் கருத்துகளை வெளிப்படுத்தினார்.

**III.** ஒளிப்படம் எடுக்கும் முறையை 1830 ஆம் ஆண்டு கண்டு பிடித்த பின்னர், எட்வர்டு மைபிரிட்சு என்ற ஆங்கிலேயர் முதலில் ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றி பெற்றார். ஈஸ்ட்மன் என்பார் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார்.எடிசன் படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டுபிடித்தார். எடிசன் ஒருவர் மட்டும் பார்க்கும் படக் கருவியை கண்டு பிடித்தார். பிரான்சிஸ் சென் கின்சு என்ற அமெரிக்கர் 1894 இல் ரிச்மண்ட் என்னுமிடத்தில் இயக்கப் படத்தைப் பலரும் பார்க்கும் வகையில் வடிவமைத்தார். புதிய பட வீழ்த்திகள் உருவாக இவருடைய கருத்துகளே அடிப்படையாக அமைந்தன.

வினாக்கள் - விடைகள்:

1. ஒளிப்படம் எடுக்கும் முறையை எந்த கண்டு பிடித்தனர்?
   1830
2. ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்தவர் யார்?
   "எட்வர்டு மை பிரிட்சு"

3. படச்சுருள் உருவாக்கும் முறையைக் கண்டு பிடித்தவர் யார்?
ஈஸ்ட்மன்
4. இயக்கப் படத்தை வடிவமைத்தவர் யார்?
பிரான்சிஸ் சென்கின்சு
5. எந்த ஆண்டு இயக்கப் படத்தை வடிவமைத்தார்?
1894

**நெடுவினாக்கள்: உரைநடை வினா எண் : 48**

1. பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்து எழுதுக.
பெண்களின் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளைப் பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை, அரசுப்பணி என வகைப்படுத்திப் பெரியார் கூறியுள்ளார்.

பெண் கல்வி: பெண்கள் கல்வி பெறுவது, அவர்களின் உரிமை மட்டுமன்று அவர்களுக்கு உலகப் படிப்பும் ஆராய்ச்சிப் படிப்பும் தாரளமாய்க் கொடுக்கப்பட வேண்டும்.

பெண்ணுரிமை: பழமையான மூட நம்பிக்கைகள், குழந்தைத் திருமணம் ஆகியன பெண்ணுரிமைக்குப் பெருந்தடைகளாகும். அவர்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும்.

சொத்துரிமை: பெண்களுக்குச் சொத்துரிமை கொடுத்து விட்டால் அவர்களுக்கு இருக்கும் அனைத்து விதமான அடிமைத்தனங்களும் ஒழிந்துவிடும்.

அரசுப்பணி : ஆண்களைப்போல, அரசின் அனைத்துத் துறைகளிலும் பெண்கள் பணியாற்ற வாய்ப்பளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் சமுதாயத்தில் புரட்சி ஏற்படும் என்றார்.

2. அம்பேத்கர் எத்தகைய இந்தியாவை அமைக்க விரும்பினார்?
அம்பேத்கர் இந்தியாவில் ஆங்கில ஆதிக்கம் நீங்கி மக்களாட்சி மலர்ந்திட வேண்டும் எனக் குரல் கொடுத்தார். மூட நம்பிக்கைகளும் தீய பழக்கங்களும் அரித்துக் கொண்டிருந்த இந்தியச் சமுதாயத்தில் சமப்படுத்தப் போராடினார். எங்கு சமத்துவம் மறுக்கப்படுகிறதோ அங்கே மனித நேயம் மறைந்து விடும் என்பதை உணர்ந்தார். அறியாமையே மக்களின் அல்லல் அனைத்திற்கும் மூல காரணமாகும். இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்காகப் பல்வேறு சிக்கல்களை ஆராய்ந்துஅரிய கருத்துகளை வெளியிட்டடார். இந்தியா குடியரசு நாடாக விளங்குவதற்குரிய இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்தளித்தார். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் மூன்றும் இந்தியச் சமுதாயத்தில் ஏற்றம் தருவன. ஆகவே இந்தியச் சமுதாயத்தில் இவை மூன்றும் செழித்திட விரும்பினார்.

3. திரைப்படம் எடுத்தலுக்கு தேவையான ஆயத்தப் பணிகளை தொகுத்தெழுதுக?
வாழ்விற்குச் சிறப்பையும் உயிர்ப்பையும் தருவது கலை. அவற்றுள் திரைப்படக்கலை சிறந்தது. உலகில் பல்வேறு மொழிகள் இருப்பினும் மக்கள் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் உலக மொழி, திரைப்படம் அது உதடு பேசும் மொழியன்று, உள்ளத்தால் பேசி உணர்ச்சியால் உருவாகும் மொழி. திரைப்படம் எடுக்கப்படுமுன், திரைப்படக் கதையையும், கதை மாந்தரையும் தேர்வு செய்வர். பின்னர்க் கதை, உரையாடல் பாடல் முதலியவற்றை ஆயத்தப்படுத்துவர். நடிகர் நடிகையர், தோழர், தோழியர் பணியாளர்கள் என நடிகர்கள் தேர்வு செய்யப்படுவர், அவர்களுக்கு ஏற்ற உடைகள் வடிவமைக்கப்படும், இசைவான குரல் இல்லாதவருக்கு வேறொருவர் குரல் தர முடியும். நடிகர்களின் நடிப்பையும், பாடும் பாடல்களையும் உரையாடல்களையும் ஒலிப்பதிவு செய்வர், உரையாடலில் எழும் ஒலி அலைகள் ஒரு நுண்ணொலி பெருக்கியைத் தாக்கும். நுண்ணொலி பெருக்கி ஒலியலைகளின் மின்அதிர்வுகளாக்கும். அந்த மின் அதிர்வுகள் பெருக்கப்பட்டு ஒருவகை விளக்கினுள் செலுத்தப்படுகின்றன. அந்த மின்னோட்டத்திற்குத் தக்கவாறு விளக்கின் ஒளி மாறும். இந்த ஒளி அதிர்வு, படச்சுருளின் விளிம்பிலுள்ள பகுதியில் விழுந்து அங்கு அஃது ஒலிப்பாதையை தோற்றுவிக்கும்.

4. தமிழன் அறிவியலின் முன்னோடி என்பதனை விளக்குக.
பேரண்டத் தோற்றம் குறித்து மேலை நாட்டவர் அண்மைக் காலமாக ஆராய்ந்து வருகின்றனர். உலகம் உருண்டையானது எனப் பதினாறாம் நூற்றாண்டில் தான் மேலை நாட்டவர் கண்டறிந்தனர். இச்செய்திகளை 'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்' எனத் திருவாசகம் பேசுகிறது. சுற்றுதல் என்கிற உலவு என்னும் சொல்லடியாக 'உலகம்' எனப் பெயரிட்டனர் தமிழர். அந்தரத்தில் தொங்குவதால் 'ஞாலம்' எனக் கூறினர். வானில் காற்றில்லாப் பகுதி உண்டு என்பதையும் 'வறிது நிலைஇய காலமும்' என்னும் புறநானூற்றுப் பாடல் வரி குறிப்பிடுகிறது. விமானி இல்லாத வானூர்தியை பண்டைத் தமிழர் செலுத்தியதை 'வலவன் ஏவா வானூர்தி' என்னும் புறப்பாடல் வரி தெரிவிக்கிறது.

கரும்பு பிழியும் எந்திரம் குறித்துப் பதிற்றுப் பத்தும், எந்திரக் கிணறு, பொறியால் இலக்கிய யானை

குறித்துப் பெருங்கதையும் பேசுவதிலிருந்து தமிழரின் பொறியியல் அறிவு புலப்படும். கனிமவியல் பற்றிய செய்தியை மணிமேகலை குறிப்பிடுகிறது. தமிழர் தாம் வாழ்ந்த நிலத்தை ஐவகைகளாகவும் நிறம் சுவை தன்மைகளின் அடிப்படையில் செம்மண் நிலம் உவர்நிலம் களர் நிலம் என மூவகைகளாகவும் பிரித்தனர். அணுவைக் குறித்து ஔவையாரும் கம்பரும் பேசுகின்றனர். நீரியல் தத்துவம், மருத்துவம் குறித்துப் பல நூல்கள் உள்ளன.

பெரிய புராணமும், கம்பராமாயணமும், மணி மேகலையும் அறுவை மருத்துவச் செய்திகளைக் கூறுகின்றன.

5. கலை அறிவியல் கல்வி, சிறுதொழில் கல்வி குறித்து விவரிக்க.

மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றுத் தொழிற்கல்வி பயில இயலாதவர்கள், கலை அறிவியல் கல்லூரிகளில் சேர்ந்து கணிதம், இயற்பியல் வேதியியல் விலங்கியல், பொருளியல், வரலாறு கணக்குப்பதிவியல், கணிப்பொறியியல், தமிழ், ஆங்கிலம் வாணிகவியல் முதலிய பிரிவுகளில் சேர்ந்து இளங்கலைப் பட்டமும் முதுகலைப் பட்டமும் பெறலாம். இளங்கலைப் பட்டம் பெற்றோர் கல்வியியல் கல்லூரியில் சேர்ந்து இளங்கல்வியியல் பட்டம் பெற்று பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம். அரசுத் தேர்வாணையங்கள், வங்கித்துறை, ஆயுள் காப்பீட்டுத்துறை வணிகத்துறை நடத்தும் போட்டித் தேர்வுகளை எழுதி வெற்றி பெற்று வேலை வாய்ப்புகளைப் பெறலாம்.

சிறு தொழில் கல்வி : பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், பெறாதவர்கள் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து ஓராண்டு

(அ.) ஈராண்டு பயிற்சி பெற்று பணியில் சேரலாம்.

கம்மியர், கடைசல் பிடிப்பவர், கட்டட வரைவாளர் நில அளவையாளர், தச்சர் முதலான படிப்புகளில் பயிற்சியைப் பெறலாம்.

இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டி, கணினி பழுது பார்க்கும் படிப்புகளில் சேரலாம்.

அரசுப் பணிக்காகக் காத்திராமல் சுயதொழில் தொடங்க வாய்ப்புண்டு. சுயதொழில் தொடங்குவதற்கு வழி காட்டுதல்கள் பயிற்சிகள் கடனுதவிகளை அரசு அளிக்கிறது.

~~~~~~~~~~~~~~~
~~~~~~~~~~~~~~~

# தமிழ் இரண்டாம் தாள்

மொழிப் பயிற்சிகள் (தமிழ் இரண்டாம் தாள்)

தமிழ் இராண்டாம் தாளில் கேள்வி எண் 11 முதல் 20 வரை ஒரு மதிப்பெண் வினாக்கள்

**1. வல்லினம் மிகா இடங்களுள் ஒன்றினை சான்றுடன் விளக்குக.**

விடை : உம்மைத் தொகைகளில் வரும் வல்லினம் மிகாது.

எ.கா. = காய் + கனி = காய்கனி

**2. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றினை சான்றுடன் விளக்குக.**

விடை : அந்த, இந்த, எந்த என்னும் சொற்களின் பின்வரும் வல்லினம் மிகும்.

எ.கா. = அந்த + கோவில் = அந்தக் கோவில்

**3. பெறு - இச்சொல்லை வினையெச்சமாக்குக.**

விடை = பெற்று

**4. ஓடு - இச்சொல்லை வினையெச்சமாக்குக.**

விடை = ஓடி

**5. பெறு - இச்சொல்லை பெயரெச்சமாக்குக.**

விடை = பெற்ற.

**6. ஓடு - இச்சொல்லை பெயரெச்சமாக்குக.**

விடை = ஓடிய.

**7. தொடரை மாற்றி அமைக்க.**

1. திருக்குறளை அனைவரும் அறிவர் - வினாத் தொடராக அமைக்க.
   விடை : திருக்குறளை அனைவரும் அறிவரோ?
2. இமயமலை மிகவும் உயரமானது - உணர்ச்சித் தொடராக மாற்று.
   விடை : என்னே, இமயமலையின் உயரம் !
3. இளமையில் கல் - செய்தித் தொடராக அமைக்க.
   விடை : இளமையில் கற்கவேண்டும்.
4. கிளி கல்லால் அடிப்பட்டது - உணர்ச்சித் தொடராக மாற்று.
   விடை : அந்தோ, கிளி கல்லால் அடிப்பட்டு விட்டதே !

**8. சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.**

1. உரிமைக் குரல் கொடுத்த நல்லோர்களை தான் நாம் சீர்திருத்த செம்மல்கள் என சிந்தை மகிழ பாராட்டுகிறோம்.
   விடை : உரிமை குரல் கொடுத்த நல்லோர்களைத் தான் நாம் சீர்திருத்தச் செம்மல்கள் என சிந்தை மகிழ பாராட்டுகிறோம்.
2. மேடைபேச்சு மிகுந்த பயனை தர வல்லது.
   விடை : மேடைப் பேச்சு மிகுந்த பயனைத் தரவல்லது.
3. கயிற்று கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
   விடை : கயிற்றுக் கட்டிலில் தன்னை மறந்து உறங்கினான்.
4. ஏழைகளுக்கு பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்று தந்தார்.
   விடை : ஏழைகளுக்குப் பொருள் பெறாமல் வாதாடி நீதி பெற்றுத் தந்தார்.

**9. பிறமொழி சொற்களுக்குரிய தமிழ் மொழி சொற்களை எழுதுக.**

1. நான் இந்த காலேஜின் ஓல்டு ஸ்டூடண்ட்.
   விடை : நான் இந்தக் கல்லூரியின் முன்னாள் மாணவன்.
2. இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்.
   விடை : இப்பாதையில் யாத்திரை செல்லுங்கள்.
3. இந்த ஷர்ட் மிகவும் காஸ்ட்லியானது.
   விடை : இந்த சட்டை மிகவும் விலை மதிப்புள்ளது.
4. ஷேத்திரங்கள் தோறும் சென்று விக்கிரகங்களை வழிபடுக.
   விடை : புண்ணியத்தலந்தோறும் சென்று கடவுள் சிலைகளை வழிபடுக.

5. நாளை நடக்க விருக்கும் மேட்சில் இந்தியா கண்டிப்பாக வின் செய்யும்.

விடை : நாளை நடக்கவிருக்கும் போட்டியில் இந்தியா கண்டிப்பாக வெற்றி பெறும்.

**10. உவமையை சொற்றொடரில் அமைத்து எழுதுக.**

1. பசுமரத்தாணியை போல

விடை : எனது ஆசிரியர் கற்பிக்கும் பாடங்கள் பசுமரத்தாணிபோல மனதில் பதிந்தது.

2. குன்றின் மேலிட்ட விளக்கு போல

விடை : புரட்சித் தலைவர் எம்.ஜி. ஆர் புகழ் குன்றின் மேலிட்ட விளக்கு போல உலக மெங்கும் பரவியுள்ளது.

3. மலரும் மணமும் போல

விடை : நாம் நல்ல நண்பர்களுடன் பழகினால் மலரும் மணமும் போல நம் வாழ்க்கை மணக்கும்.

4. கடலில் கரைத்த பெருங்காயம் போல

விடை : தீய நண்பர்களுக்கு நாம் சொல்லும் அறிவுரை கடலில் கரைத்த பெருங்காயம் போல வீணாகித் தான் போகும்.

**11. வழூஉச் சொற்களை நீக்கி எழுது.**

1. வலது பக்கச் சுவற்றில் எழுதாதே.

விடை : வலப்பக்கச் சுவரில் எழுதாதே.

2. அவன் வீண் சிலவு செய்கிறான்.

விடை : அவன் வீண் செலவு செய்கிறான்.

3. இன்னிக்கு ஒரு கிலோ அவரக்கா வாங்கி வந்தேன்.

விடை : இன்றைக்கு ஒரு கிலோ அவரைக்காய் வாங்கி வந்தேன்.

**12. ஒருமை பன்மை பிழை நீக்கி எழுதுக.**

1. அவன் கவிஞன் அன்று.

விடை : அவன் கவிஞன் அல்லன்.

2. பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி, பெண்ணுரிமை, சொத்துரிமை.

விடை : பெண்கள் பெற வேண்டியன பெண்கல்வி பெண்ணுரிமை, சொத்துரிமை

3. அவர் கையில் கோப்புகள் இருந்தது.

விடை : அவர் கையில் கோப்புகள் இருந்தன.

4. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி, ஒலி படக்கருவி என்ற கருவி பயன்படுகின்றன.

விடை : திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலி படக்கருவி என்ற கருவி பயன்படுகிறது.

5. பேருந்துகள் ஓடாது.

விடை : பேருந்துகள் ஓடா.

**13. இலக்கண குறிப்பு தருக.**

1. பொய்யா விளக்கு
எய்தாப் பழி
பழியில்லா மன்னன்
வாராப் பொருளாக்கம்
தேரா மன்னா
செலவொழியா வழி.
— ஈறு கெட்ட எதிர்மறை பெயரெச்சம்

2. காக்க
வருக
தருக
கெடுக
வாழ்க
புகுக
— வியங்கோள் வினைமுற்று

3. தேனும் மீனும்
பொன்னும் துகிரும்
முத்தும் மணியும் — எண்ணும்மை

4. புதிது புதிது
சொல்லி சொல்லி
நன்று நன்று
வருக வருக — அடுக்குத் தொடர்

5. சலசல
பளபள
குடுகுடு
கலகல — இரட்டைக் கிளவி

**14. நிறுத்தற் குறியீடு:-**

1. ஔவையார் அதியமானைக் கண்டார் புகழ்ந்து பாடினார் பரிசு பெற்றார்.

   விடை : ஔவையார் அதியமானைக் கண்டார், புகழ்ந்து பாடினார், பரிசு பெற்றார்.

2. கதைப்படங்கள் மட்டுமின்றிக் கருத்துப் படங்கள் செய்திப் படங்கள் விளக்கப்படங்கள் கல்விப் படங்கள் என பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

   விடை : கதைப் படங்கள் மட்டுமின்றி கருத்துப்படங்கள், செய்திப் படங்கள், விளக்கப்படங்கள், கல்விப்படங்கள் எனப் பல வளர்ச்சி நிலைகளைத் திரைப்படத்துறை எட்டியுள்ளது.

**15. தொகைச் சொல்லை விரித்து எழுதுக.**

1. ஐந்திணை - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.
2. முத்தமிழ் - இயல், இசை, நாடகம்.
3. மூவேந்தர் - சேரர், சோழர், பாண்டியர்.
4. நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல்.
5. இருவினை - நல்வினை, தீவினை
6. நாற்றிசை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு.

**16. விரியுவமையை தொகையுவமைகளாக மாற்றுக:-**

1. கயல் போன்ற விழி. விடை : கயல்விழி
2. தேன் போன்ற மொழி விடை : தேன்மொழி
3. முத்து போன்ற பல் விடை : முத்துப்பல்

**17. தொகையுவமையை விரியுவமையாக மாற்றுக:-**

1. மதிமுகம் விடை : மதி போன்ற முகம்
2. பவளவாய் விடை : பவளம் போன்ற வாய்
3. கிளிமொழி விடை : கிளி போன்ற மொழி

**18. உவமையை உருவகமாக மாற்று:-**

1. மலர்ப்பாதம் விடை : பாதமலர்
2. தேன்தமிழ் விடை : தமிழ்த்தேன்

**உருவகத்தை உவமையாக மாற்று:-**

1. மொழியமுது விடை : அமுத மொழி
2. விழிக்கயல் விடை : கயல்விழி

**உரிய உவம உருபை இணைத்து எழுதுக.**

1. மான் ________ மருளும் பார்வை.(போல)
2. வேய் ________ தோள். (புரை)
3. கிளி ________ பேசினாள்.(போல) (புரை, போல, அன்ன)

**இளமைப் பெயர்களை பொருத்துக:-**

1. ஆடு - குஞ்சு
2. மான் - பிள்ளை
3. கீரி - குட்டி
4. கோழி - கன்று.

விடை

1. ஆடு - குட்டி
2. மான் - கன்று
3. கீரி - பிள்ளை
4. கோழி - குஞ்சு

**மரபுத் தொடருக்கு ஏற்ற பொருளை எழுது.**

1. ஆயிரங் காலத்துப் பயிர் - நீண்ட காலத்திற்குரியது
2. முதலைக் கண்ணீர் - பொய்யழுகை
3. ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது - பட்டறிவில்லாத படிப்பு
4. வாழையடி வாழையாய் - பரம்பரை பரம்பரையாய்
5. கொடிகட்டி பறத்தல் - தனிபுகழோடு விளங்குதல்

**6. சீட்டு கிழிதல் - வேலை பறி போகுதல்**

அடிக்கோடிட்ட மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.

1. எம். ஜி. இராமச்சந்திரன் திரைவானில் கொடிகட்டிப் பறந்தார்.
   விடை: தனிப்புகழோடு விளங்கினார்.
2. இளங்கோவின் குடும்பத்தினர் வாழையடி வாழையாய் வேணாள் தொழில் செய்து வந்தனர்.
   விடை: பரம்பரை பரம்பரையாய்

**துணைப்பாடம் (வினா எண் 31-33)**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒவ்வொன்றிற்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க:-**

**1. பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப் பற்றினை விளக்குக.**

பரிதிமாற் கலைஞரின் இயற்பெயர் சூரிய நாராயண சாஸ்திரி.

தமிழார்வம் கொண்ட "இயற்றமிழ் மாணவர்களுக்குத் தம் வீட்டிலேயே சுவைபடக் கற்பித்தார்.

ஆங்கிலப் பேராசிரியர் ஒரு பாடலுக்கு விளக்கம் கூறினார். அப்போது, படகின் துடுப்புகளுக்கு, பறவையின் சிறகு உவமையாகக் கூறியதை மிகவும் வியந்து கூறி நடத்தினார்.

மேலும், இதுபோன்ற உவமை தமிழில் உண்டா? என்றார்.

பரிதிமாற் கலைஞர் பன்னிரெண்டாம் நூற்றாண்டிலேயே கம்பராமாயணம் குகப் படலத்தில் இத்தகைய உவமை உள்ளது என்று கூறி, "விடுநனி கடிது" - என்னும் அப்பாடலைப் பாடிக் காட்டினார்.

ஆங்கிலப் பேராசிரியர் அவரை வியந்து பாராட்டினார்.

**2. பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டினை விவரி.**

1902 ஆம் ஆண்டில் பல்கலை கழகப் பாடத்திட்டத்தில் தமிழை விலக்கி வடமொழியைக் கொண்டு வர முடிவெடுக்கப்பட்டது.

அந்த முடிவு, பரிதிமாற் கலைஞரின் உறுதியான எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

தமிழ்ச் சொற்களோடு, வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதுவதைக் கண்டித்தார்.

ரூபாவதி, கலாவதி முதலிய நாடகங்களை இயற்றினார். அவரே, பெண்பால் வேடமிட்டு நடித்து, நாடகக்கலை வளர்ச்சிக்குத் துணை புரிந்தார்.

தமிழ்மொழியை "உயர்தனிச் செம்மொழி" என்று முதன் முதலில் நிலை நாட்டிய பெருமைக்கு உரியவர்.

**3. "மெல்ல மெல்ல மற" - என்னும் சிறுகதையின் மையக் கருத்தை மாறாமல் சுருக்கி எழுது.**

கமலநாதன் ஓயாமல் புகை பிடிப்பவன். கோகிலா இவன் மனைவி. அவள் எவ்வளவு எடுத்துக் கூறியும் திருந்தவில்லை.

கமலநாதனின் நண்பன் இராமலிங்கம். இவனும் புகைப் பிடிப்பவன். இப்போது புற்றுநோயால் மருத்துவமனையில் இறந்து விடுகிறான்.

நண்பன் இராமலிங்கத்தின் மரணம் கமலநாதனைப் பெரிதும் பாதித்தது.

இராமலிங்கத்தின் மனைவி சியாமளாவின் விதவைக் கோலமும், தந்தையற்ற குழந்தைகளின் ஏக்கமும், அழுகையும் கமலநாதனை யோசிக்கச் செய்தது.

புகை பிடிக்கும் பழக்கத்தை விட முயற்சி செய்கிறான். முடிவு செய்து, அதற்கான முயற்சியிலும் இறங்கினான்.

அவன் மனைவி கோகிலாவும் உதவி செய்ய, கமலநாதன் "மெல்ல மெல்ல" - மறக்கிறான்.

**"புகை உடலுக்குப் பகை"**

**4. எம்.ஜி. இராமச்சந்திரன் பற்றிக் கட்டுரை எழுதுக.**

கோபாலமேனன் - சத்தியபாமா தம்பதியினருக்கு 5-வது மகனாக 17.01.1917ல் இலங்கையிலுள்ள கண்டியில் எம்.ஜி.ஆர் பிறந்தார்.

சிறுவயதில் வறுமையின் காரணமாக மேடை நாடகங்களில் சிறுசிறு வேடங்களில் நடித்து, கடின உழைப்பினால் கதாநாயகனாக உயர்ந்தார்.

நடிப்பையும், அரசியலையும், இவரது இரு கண்களாகக் கருதினார். "புரட்சி நடிகர்", "மக்கள் திலகம்" என்று மக்களால் அழைக்கப்பட்டார்.

அண்ணாவின் "இதயக்கனி" ஆனார்.

சத்துணவுத் திட்டத்தைக் கொண்டு வந்தார்.

சிறந்த நடிகருக்கான "பாரத்" பட்டமும், இந்தியாவின் உயரிய விருதான "பாரத் ரத்னா" விருதையும் பெற்றார்.

24.12.1987 அன்று மறைந்தார்.

வாழ்ந்தவர் கோடி மறைந்தவர் கோடி
மக்கள் மனதில் நிற்பவர் யார்?

**5. அகழாய்வு குறித்த செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

பழங்காலத்தைப் பற்றி ஆய்வு செய்தலே தொல் பொருளியல் அவர்கள் விட்டுச் சென்ற எச்சங்கள், தடயங்கள், கல்வெட்டுகள், காசுகள், செப்பேடுகள், இவற்றை ஆய்வு செய்வதே அகழாய்வு. ஆங்கிலத்தில். "ஆர்க்கியாலஜி" - என்பர்.

காவிரிப் பூம்பட்டினம் ஒரு துறைமுக நகரம். இந்த நகரம் இருந்ததற்கான ஆதாரங்கள், 1963 ஆம் ஆண்டு மேற் கொண்ட கடல் அகழாய்வின் போது கண்டறியப்பட்டன.

அகழாய்வு என்பது மண்ணை மிக நுட்பமாகவும், பொறுமையுடனும் சிறுகச் சிறுகத் தோண்டி தடயங்களைச் சிதையாமல் திரட்டுவது.

ஒரு நாட்டின் பழமையான இலக்கியங்கள் அகழாய்விற்குரிய இடங்களைத் தேர்வு செய்ய துணையாக இருக்கின்றன.

அகழாய்வின்மூலம் பூமியின் மேற்பரப்பினில் மட்டுமின்றி, குகைகளினுள்ளும், நீரூக்கடியிலும் செய்யலாம். இதன் மூலம் முற்காலத்தில் நீரினுள் மறைந்த நகரங்கள், துறை முகங்கள் பற்றிய அரிய பல செய்திகளை வெளிக்கொணர இயலும்.

**6. குறட்டை ஒலி கதையின் கருத்தும் பொருளும் மாறாமல் சுருக்கி எழுதுக.**

செல்வச் செழிப்பு மிகுந்த, கொடுக்க மனமற்ற அரக்க மனம் படைத்த, குழந்தைகளற்ற கணவன் - மனைவியார் வீட்டின் வட பகுதியில் குடியிருந்தார்.

வறுமை வாட்டினாலும் இரக்கமனம் படைத்த கணவன் - மனைவி, 1 பாட்டி, 6 குழந்தைகள், 1 நாய், இப்போது 7வது குழந்தை என்று வாழ்ந்து வரும் குடும்பம் வீட்டின் தென்பகுதியில் குடியிருந்தனர்.

நாய் 5 குட்டிகளை ஈன்றது. தாய் நாய் காணாமற் போகவே, குட்டிகள் பசியால் கத்தின. பால் வாங்கி ஊற்றவோ இவர்களிடம் பணம் இல்லை.

அரக்க மனம் கொண்டோர் நன்றாக உண்டு, குறட்டை விட்டு உறங்கிக் கொண்டிருந்தனர்.

ஆனால் இரக்கமனம் கொண்ட தாயோ, தன் குழந்தையின் பாலையே பஞ்சில் நனைத்து குட்டிகளுக்கும் கொடுத்து அவற்றின் பசியை ஆற்றினார்.

ஏப்ப ஒலி வந்த அதே திசையிலிருந்து, குறட்டை ஒலி வந்து கொண்டிருந்தது.

**7. இலிண்ட் கிரென் பண்பு நலன்களை எழுதுக.**

முதியவர் சூம்பிப் போன கால்களை உடையவர். கைகளால் தவழ்ந்து செல்வார். தோலினால் ஆன கையுறை, காலுறைகளை அணிவர். குட்டையான தாடி, சிறிய கண்கள்.

நிதான குணம் உள்ளவர். எதையும் நிதானமாகக் கூறுவார். செய்வார்.

தன்னிடம் எல்லாரும் கவனமாகவும், அக்கறையாகவும், இருக்கிறார்கள் என்பதால், இந்த சமூகத்தின் மீதும் நல்லெண்ணம் கொண்டவர்.

தான் இப்படித்தான் பிறந்தேன் என்பதிலிருந்தும், எல்லாரும் நினைக்கிற அளவிற்கு அவ்வளவு மோசம் இல்லை என்று தன்னை முழுமையாக ஏற்றுக் கொண்டவர்.

இந்த உலகம் என்னிடம் கருணையுடன் இருக்கிறது. நான் சந்திப்பவர்கள் எல்லோரும் அன்பான மனிதர்கள். அனைத்திலும் நல்லவற்றை மட்டுமே பார்க்கும் நேர் மறையான சிந்தனை உள்ளவர்.

அனைவரிடமும் நல்ல உறவு கொள்பவர்.

ஏழ்மையிலும், சுத்தமாகவும், நேர்த்தியாகவும் தன் வீட்டினை வைத்திருக்கும் ஒழுக்கமானவர்.

ஒரு பயனுள்ள மனிதன் இலிண்ட் கிரென் என்று வீட்டுக்காரரால் பாராட்டப்பட்ட வியத்தகு மனிதர். எல்லாரிடமிருந்தும் வேறுபட்டவர்.

**8. நூலகத் துறையின் வளர்ச்சி பற்றிக் கட்டுரை வரைக.**

"ஆறில்லா ஊருக்கு அழகுபாழ்" - என்பது பழமொழி. அதுபோல, "நூலகமில்லா ஊருக்கு அறிவு பாழ்" - என்பது புதுமொழி.

படிப்பவரின் சிந்தனையைத் தூண்டும். அறிவாற்றலை ஒளிரச் செய்யும். வாழ்க்கைக்கு வழிகாட்டும் கலங்கரைத் தீபமாகத் திகழ்பவை நூல்கள்.

எல்லா ஊர்களிலும் நூலகம் அமைக்கும் உயரிய பணியை பொது நூலகத் துறை செய்து வருகிறது.

தமிழகத்தில் ஏறக்குறைய 10 இடங்களில் உள்ளன. இதன் வளர்ச்சி 1820ஆம் ஆண்டு முதல் - 1981 ஆம் ஆண்டு வரை.

நூலகத்தில் செய்தித்தாள், வார, மாத இதழ், சிறப்பிதழ், வேலை வாய்ப்புச் செய்திகள் காணப்படும்.

நூல்கள் தற்போது மின்னணு மயமாக்கப்பட்டு பெரிதும் பயனளிக்கிறது.

பள்ளிகள், கல்லூரிகளிலும் நூலகங்கள் திறக்கப்பட்டு மக்கள் அறிவு பெற்று வருகின்றனர். மாணவர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

அண்ணா நூற்றாண்டு நூலகம் 2010 ம் ஆண்டு கோட்டூர்புரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பள்ளியில் மட்டுமல்ல, வகுப்பறையிலும் அறிவு வளர "புத்தகப் பூங்கொத்து" பெரிதும் வழி வகுக்கிறது. ஆகவே நூல்களைப் படித்துப் பார்த்து நாம் அறிவை வளர்த்துக் கொள்வோம்.

## வினாஎண் - 34 முதல் 41 வரை

## பகுதி - 3

**வினா எண் : 34**

1. ஆங்கில சொற்களுக்கு இணையான தமிழாக்கம் செய்க:

"சன்டேவர்றதுக்கு இன்னும் ஸிக்ஸ் டேஸ் இருக்குதே, டோண்ட் வொர்ரி. டுமாரோ ஈவினிங் ஷாப்பிங் போகலாம். இப்ப உனக்கு ஹேப்பி தானே"

விடை: ஞாயிற்றுகிழமை வர்றதுக்கு இன்னும் ஆறு நாள்கள் இருக்குதோ, கவலைப்படாதே. நாளை மாலை கடைக்கு போகலாம். இப்ப உனக்கு மகிழ்ச்சி தானே

2. சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே? " வழியிலே ஒரே டிராபிக் ஜாம்டா.அதனால தான் லேட். சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்? டிக்கெட் கிடைச்சுதா.

விடை: " சுரேஷ், என்னாச்சு? ஏன் தாமதமாக வருகிறாய்?

" வழியிலே ஒரே போக்குவரத்து நெரிசல். அதனால் தான் தாமதம். சரி சரி. பேருந்து எத்தனை மணிக்கு வரும்?

பயணச்சீட்டு கிடைத்ததா?"

3. பள்ளியிலிந்து வீட்டிற்குள் நுழைந்த பாரி தன் ஸ்கூல் பேக்கை தூக்கி போட்டுவிட்டு "மம்மி வாட்டர்" என்றான்.

அவன் தாய், "கை கால் க்ளீன் பண்ணிட்டு பேஸ் வாஷ் பண்ணிட்டு வா" என்றார்.

விடை: பள்ளியிலிருந்து வீட்டிற்குள் நுழைந்த பாரி தன் பள்ளிப்பையை தூக்கி போட்டுவிட்டு,"அம்மா, தண்ணீர்" என்றான்.

அவன் தாய், "கைகால். சுத்தம் பண்ணிட்டு முகம் கழுவி விட்டு வா" என்றார்.

ஆ. அரபு எண்களை தமிழெண்களாக மாற்று:

| 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 0 | க | உ | ங | ச | ரு | சு | எ | அ | சு |

கடுகு, உளுந்து, நனைந்து, சமைத்து, ருசித்து, சாப்பிட்டேன் என்று அவன் கூறினான்.

| அரபு எண்கள் | - | தமிழெண்கள் |
|---|---|---|
| 100 | - | க00 |
| 150 | - | கரு0 |
| 200 | - | உ00 |
| 176 | - | கஎசு |

வினா எண் : 35

அ. ஆங்கிலப் பத்தியை தமிழாக்கம் செய்க:

1. Trees are useful to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables,and other furnitures. We get oil from the oilseeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicine.

   மரங்கள் நமக்கு மிகவும் உபயோகமானவை. அவை நமக்கு மரக்கட்டை மற்றும் எரிபொருள் கொடுக்கின்றன. மரக்கட்டை நாற்காலி, மேஜை மற்றும் தளவாடங்கள் தயாரிக்கப் பயன்படுகின்றன. நாம் சில மரங்களின் விதைகளிலிருந்து எண்ணெய் பெறுகிறோம். இலை மற்றும் பழங்கள் மருந்துகள் தயாரிக்கப் பயன்படுகின்றன.

2. This is the age of computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, film industrial concerns and government departments. Lot of information process is required.

   இது கணினியின் காலம். கணினி தற்போது வாழ்க்கையின் மிக மிக முக்கிய அம்சமாகும். இன்றைய நிலையில் வியாபாரம், நிறுவனம், தொழிற்சாலைகள் மற்றும்அரசுத்துறைகளில் ஏராளமான தகவல் விவரங்கள் தேவைப்படுகின்றது.

3. Food, is essential for all living beings. Without food, man cannot live long. Every man has to eat a certain quantity of food. So every man has to eat enough to live.

   உணவு உயிர் வாழ அவசியம். உணவின்றி மனிதனால் உயிர் வாழ இயலாது. ஒவ்வொரு மனிதனும் ஓரளவு உணவாவது சாப்பிட வேண்டியுள்ளது. எனவே ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ போதுமான உணவு உட்கொள்ள வேண்டியுள்ளது.

ஆ. ஆங்கில பழமொழிக்கு இணையான தமிழ் பழமொழியை எழுதுக:

| | ஆங்கில பழமொழி | தமிழாக்கம் |
|---|---|---|
| 1. | Man proposes God disposes | நாம் ஒன்று நினைத்தால் தெய்வம் ஒன்று நினைக்கும் |
| 2. | knowledge is power | அறிவே ஆற்றல் |
| 3. | Strike while the iron is hot | பருவத்தே பயிர் செய் |
| 4. | Money makes many things | பணம் பத்தும் செய்யும் |
| 5. | Tit for tat | பழிக்கு பழி |
| 6. | Live and let live | வாழு, வாழவிடு |
| 7. | Make hay while the sun shines | காற்றுள்ள போதே தூற்றிக்கொள் |
| 8. | Haste makes waste | பதறிய காரியம் சிதறும் |
| 9. | Health is wealth | நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் |
| 10. | No pain, No gain | மாரியல்லாது காரியமில்லை |

11. East or west, home is best — எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
12. Work is workship — செய்யும் தொழிலே தெய்வம்
13. Time is Gold — காலம் பொன் போன்றது
14. Old is gold — பழைமையே பசும்பொன்
15. Diamond, cuts diamonds — முள்ளை முள்ளால் எடு.
16. Failure is the stepping stone to success — தோல்வியே வெற்றிக்கு முதல் படி.
17. Efforts never fail — முயற்சி திருவினையாக்கும்
18. All that gliters are not gold — மின்னுவதெல்லாம் பொன்னல்ல
19. Look before you leap — ஆழம் அறியாமல் காலை விடாதே
20. Art is long and life is short — கல்வி கரையில் கற்பவர் நாள் சில
21. Self help is the best help — தன் கையே தனக்குதவி
22. Too much of anything is good for nothing — அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.
23. Empty vessels make the greatest sound — குறைகுடம் கூத்தாடும்
24. Manners make the man — ஒழுக்கம் உயர்வு தரும்
25. A friend in need is friend indeed — உயிர் கொடுப்பான் தோழன்
26. Barking dogs seldom bite — குரைக்கிற நாய் கடிக்காது
27. Think everybody alike — உன்னைப் போல் பிறரையும் நேசி.
28. Slow and steady wins the race — முயற்சி திருவினையாக்கும்
29. Prevention is better than cure — வரும் முன் காப்போம்
30. Covert all lose all — பேராசை பெரு நஷ்டம்

வினா எண் : 36

அ. கதை எழுதுதல்:

கீழ்வானம் சிவக்க தொடங்கி இருந்தது. பறவைகள் ஒலியெழுப்பிவாறே தம்தம் கூடுகளை விட்டு பறக்கத் தொடங்கின. அந்த விடியற்காலை நேரத்தில் குமரன் ........................

<u>கதை எழுத தெரிந்தால் தலைப்பு தந்து தொடரச் செய்தல்.</u>

ஆ. கவிதை எழுதுதல்:

மழை

மழையின் வாசம் -
மண்ணின் சுவாசம்
மழையின் ஓர் துளி-
மண்ணின் உயர்த்துளி
வானத்தின் திருவிழா
வாழ்த்தும் நம் உள்ளங்கள்
மேகக்கூட்டங்களின் ஆரவாரம்
மண்ணில் உயிர்களின் ஆதாரம்
மழை அதனை
வரவேற்க மரம் வளர்ப்போம்
வனங்கள் அழியாமல் பாதுகாப்போம்.

தாய்

தாயின் கருவறை
சுகமான சொர்க்கமே
வஞ்சனை யில்லாதது
தாயின் அன்பு
வாட்டமில்லாதது
தாயின் அன்பு
கலப்படமில்லாதது
தாயின் அன்பு
அன்பு என்றாலே அம்மா
அம்மாவை உயிரென
நேசித்திடுவோம்.

வானவில்

ஏழு வண்ண ஓவியமே
உன்னை வண்ணம் தீட்டியவன் யார்?
மழையின் மாராப்பைத் தாண்டி
உன் எழிலை எங்களுக்குத் தாராயோ?
வண்ணத்தினை அறியாத மழலைக் கூட
உன்னை எண்ணத்தில் வைத்து ரசிப்பர்
கடவுளின் படைப்புகளை எண்ணி
பூரிக்கின்றேன். உன் வண்ண அழகை
ஆராதிக்கின்றேன்

குழந்தை

மழலையின் சிரிப்பு
மனசுக்குள் மத்தாப்பு
குழந்தைகளின் குதூகலம்
கொண்டாடுவோம் தினம்
கள்ளமில்லா வெள்ளை உள்ளம்
கவர்ந்திடும் நம்மை எல்லாம்
குழல், யாழ் ஒலிகளை விட
மழலையின் சொல் இனிது
மழலைகளை ரசித்திடுவோம்.

நட்பு

நட்பு என்பது நல்லவர்களுடன்
நாம் கொள்வது இனிமை
நண்பர்கள் இருந்தால் நமக்கு
என்றும் இல்லை தனிமை
துன்பம் இன்பம் இரண்டிலும்
நமக்கு தோள் கொடுப்பவன் தோழன்
நல்ல நட்புக்கு உயிர் கொடுப்போம்
நல்லவர்களை நட்பாக்கி
உலகை வெல்வோம்.

முயற்சி

முயற்சி என்பது கடல் அலைபோல்
முயன்று கொண்டே இருந்தால்
வெற்றி நிச்சயம்
முயன்றால் முடியாதது ஏதும் இல்லை
மூச்சு விடுபவன் எல்லாம் மனிதன் அல்ல
முயற்சி உடையவனே மனிதன்
முயற்சிக்கு ஏற்ற கூலி
கண்டிப்பாக கிடைத்திடும்
முயன்றவனுக்கு ஆமை - முயல் கதையே
உதாரணம்.

கடல்

கடலில் கிடைக்கும் பொருள்கள்
ஏராளம் ஏராளம்
எண்ணிப்பார்த்தால் எல்லாமே
தாராளம், தாராளம்
அலைகள் சொல்லும்
மனிதனுக்கு ஆயிரம் கதைகள்
முயற்சிக் கொண்டவன்
ஓயாது அலைகளைப் போல
முயன்றால் முடியாதது
ஏதுமில்லை

பூஞ்சோலை

பூக்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையில் ....
வண்டுகள் தேன் குடித்து வாழ்த்தும்
இயற்கை அன்னையின் இணையில்லாத
படைப்புகளில் எண்ணி லயிக்கிறது மனம்
வண்ண வண்ணப் பூக்கள்
வாழ்க்கைக்கு சொல்லும் பாடங்கள்
வாழ்நாள் சிறியதாயினும்
சாதனைப் பூக்களாய் மாறிடு.
வெற்றியை நாடிடு
வேர்வை பொங்க பாடுபடு

கார்மேகம்

கண்ணனின் நிறம் கருப்பு
கார்மேகமே நீயும் கருப்பு
உன் வடிவினைக் கண்டு
பலமுறை நான் வியந்துள்ளேன்
யானைப்போலவும், பூனைப் போலவும்
நீ பலவாறாக காட்சியளித்தாலும்
உன் நோக்கம் என்னவோ
மக்களின் உயிர் காக்கும் செயலே
வானில் கார்மேகம் கண்டதும்
உள்ளத்தில் இன்பம் பொங்கும்.

கேள்வி எண்: 37

பாடலின் திரண்ட கருத்தை எழுதி ஐந்து நயங்களை எழுதுக.

மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து
தனிமனிதத் தத்துவமாம் இருளைப் போக்கி
சகமக்கள் ஒன்றெனப துணர்வதற்கும்
இனிதினிதாய் எழுந்த உயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர் தரு சுவடிச்சாலை
புனிதமென்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தக சாலை வேண்டும் நாட்டில் யாண்டும்

புத்தக சாலை

மையக்கருத்து:

மனிதர் எல்லாம் அன்பு நெறியோடு, வானைப் போன்ற பரந்த மனமும் தனி மனித சுயநலம் போக்கி அனைத்து மக்களும் ஒன்று என்று உணர்ந்து நன்னெறி ஓங்க புலவர்கள் இயற்றிய புத்தகச் சாலைகள் நாட்டில் அமைதல் வேண்டும்.

திரண்டகருத்து:

மனிதர்கள் அன்புடன் வாழும் மனநிலை பெற வேண்டும். தனிமனித அறியாமை இருளை நீக்கவும் அனைவரும் சமம் என்னும் உயர்ந்த நோக்கம் வேண்டும். சிந்தனையை தூண்டும் பெரியோர்கள் கூறிய சிந்தனைகள் அடங்கிய புத்தகக் சாலைகள் நாடெங்கும் பெருக வேண்டும்.

அணிநயம்:

வானைப் போல விரிவடைந்து

போல எனும் உவம உருபு அழகு செய்வதால் - உவமையணி பயின்றுள்ளது.

எதுகை நயம்:

மனிதரெலாம்

தனி மனித

இனிதினிதாய்

புனித முற்று

இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து எதுகைச்சுவை தந்துள்ளது.

மோனை நயம்:

மனிதரெலாம்

மனோபாவம்

இனிதினிதாய்

இலகுவது

முதலெழுத்து ஒன்றி வந்து மோனைச்சுவை பெற்றுள்ளது.

சொல்நயம்:

" மனிதர்களின் மனோபாவம் வானைப்போல் விரிவடைந்து" அன்பு நெறி, மனோபாவம், தனிமனித தத்துவம் - இன்பம் பயக்கும் ஓசைநயம் மிக்க சொற்களை கவிஞர் கையாண்டுள்ளார்.

பொருள் நயம்:

" புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில் புத்தகசாலை வேண்டும் நாட்டில் யாண்டும்".

மக்கள் புனிதமான புது வாழ்வு வாழ புத்தகசாலைகள் நாட்டில் அமைதல் வேண்டும் என்று பொருள்படுமாறு அமைந்துள்ளது. நயமாக நூலகம் அமைதல் வேண்டும் என்ற பொருள்படுமாறு கூறியுள்ளார் கவிஞர்.

2. பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்

- பாரதியார்

தமிழை வளர்ப்போம்

திரண்ட கருத்து:

பிற நாட்டு நல்லறிஞர்களால் இயற்றப்பட்ட நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்திடல் வேண்டும். கால மாற்றங்களால் அழியாத புகழ்மிக்க புதுப்புது நூல்களை தமிழ் மொழியில் இயற்றுதல் வேண்டும். தமிழின் பழம்பெருமைகளை மறைவாக நமக்குள்ளே பேசிக் கொண்டிருப்பதில் ஒரு பெருமையும் இல்லை. புது நூல்கள் இயற்றி, வெளி நாட்டவரும் அதைப் போற்றி மதிக்கும் படி செய்தல் வேண்டும்.

எதுகை நயம்:

பிறநாட்டு

மறைவாக
இறவாத
திறமான
இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதால் எதுகை நயம் பெற்று விளங்குகின்றது.
மோனை நயம்:
பிறநாட்டு - பெயர்த்தல்
மறைவாக - மகிமை
இறவாத - இயற்றல்
முதலெழுத்து ஒன்றி வருவதால் மோனை நயம் பெற்றுள்ளது.
அணிநயம்:
'வேண்டும்' எனும் சொல் பலமுறை வந்து ஒரே பொருளை உணர்த்துவதால் இது பின்வரு நிலையணி ஆயிற்று.
சொல்நயம்:
இறவாத புகழ், பழங்கதைகள், திறமான புலமை முதலிய இன்பம் பயக்கும் ஓசைநயம் மிக்க சொற்களை கவிஞர் கையாண்டுள்ளார்.
பொருள் நயம்:
பல்துறை நூல்கள் தமிழில் படைத்தல் தமிழ் வளர்ச்சி பெறும் என்பதனை கவிஞர் நயமாக கூறியுள்ளார்.
இயைபு நயம்:
"வேண்டும் எனும் சொல் ஒவ்வோர் அடியிலும் இயைந்து வந்துள்ளது.

3. அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்
ஆருயிர்கட் கெல்லாம்நான் அன்பு செயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்
செப்பாத மேனிலைமேல் சுத்தசிவ மார்க்கம்
திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்
தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண் டுவனே

- இராமலிங்க அடிகளார்.

இறையருள் வேண்டல்

திரண்ட கருத்து:
அப்பா, நான் வேண்டுகின்ற எல்லாவற்றையும் கேட்டு, எனக்கு அருள் புரிவாயாக.
உலக உயிர்கள் எல்லாவற்றின் மீதும் அன்பு காட்டுதல் வேண்டும் சொல்லுதற்கியலாத உயர்ந்த இடத்தில் இருக்கின்ற உயிர் கொண்டு செல்லுதல் வேண்டும். பிழைகள் செய்வதை எல்லாம் பொறுத்துக் கொள்ளுதல் வேண்டும். என் அருமை தலைவா! நான் உன்னை பிரியாமல் இருக்கவும் அருள் செய்க.
எதுகை நயம்:
அப்பா நான்
எப்பாகும்
செப்பாத
தப்பேது
இரண்டாம் எழுத்து ஒன்றி வந்து எதுகை நயம் பெற்றுள்ளது.
மோனை நயம்:
எப்பாரும்
எப்பதமும்
எங்கனும்
முதலெழுத்து ஒன்றி வருவது மோனைத் தொடையாகும்.
அணிநயம்:
அருள் அன்பு புகழ்
எனும் இயல்பான விளக்கங்கள் கொண்டுள்ளதால் இயல்பு நவிற்சி அணி அமைந்துள்ளது.
சொல்நயம்:
ஆருயிர், எப்பாகும், எப்பதம்ம செப்பாத மேனிலை - முதலிய இன்பம் பயக்கும் இசைநயம் மிக்க சொற்களை கவிஞர் கையாண்டுள்ளார்.

பொருள் நயம்:

இறைப்பொருளின் அருள் கிடைக்கப் பெற்றால், உயர்நிலை எய்தலாம் என்னும் பொருளைக் கவிஞர் நயமாக நவின்றுள்ளார்.

சுவைநயம்:

இறைப்பொருளின் அருள் நிலைகளை இன்புறுதலோடு பாடியுள்ளதால் இப்பாடலில் உவகைச்சுவை பயின்று வந்துள்ளது.

வினா எண் : 38

படிவம் நிரப்புதல்:

வங்கியில் பணம் செலுத்தும் படிவம் / வங்கியில் பணம் எடுக்கும் படிவம்/தென்னக வண்டி முன்பதிவுப் படிவம்






சீ. எம்./CM-257/T 1106/ரி/T

தெற்கு ரயில்வே

## முன்பதிவு/ரத்து செய்யும் விண்ணப்ப படிவம்

நீங்கள் மருத்துவராயிருந்தால் தயவு செய்து பெட்டியில் (✓) செய்யவும் (நீங்கள் அவசரத்திற்கு உதவ விரும்பினால்) ☐

மூத்த குடிமக்கள் சலுகை தேவைப்பட்டால் " தேவை/இல்லை " என்று அதற்குரிய பெட்டியில் எழுதவும். இச்சலுகை பெற விரும்பினால் வயது அத்தாட்சி சான்றிதழ் ஒன்றை பயணத்தின்போது எடுத்துச் செல்ல வேண்டும் (தவறினால் இரயில்வே விதிகளின்படி உரிய அபராதம் விதிக்கப்படும்) ☐

உங்கள் பயணம் உயர்வகுப்புக்கு மேம்படுத்தப்படலாமா ? தேவை/இல்லை என்று எழுதவும் (உங்கள் விருப்பத்தை குறிப்பிடத் தவறினால் முழுக் கட்டண பயணிகளுக்கு இச்சலுகை தன்னிச்சையாக வழங்கப்படும்) ☐

நீங்கள் தனிமையில் பயணிக்கும் கர்ப்பிணி பெண் எனில், இங்கு (✓) குறியிடவும் ☐

வண்டி எண்/பெயர்.................................................... பயண தேதி....................................

வகுப்பு.................................படுக்கை/உட்காரும் எண்ணிக்கை........................................

புறப்படும் இடம்.............................................சேரும் இடம்..........................................

ஏறும் இடம்.....................................

| வ. எண். | பெயர் (15 எழுத்துக்களுக்கு மிகாமல்) | பால் ஆ/பெண் | வயது | பயணச்சலுகை உரிமை எண் | விருப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | கீழ் படுக்கை/ நடு படுக்கை/ மேல் படுக்கை |
| 2. | | | | | |
| 3. | | | | | சைவம்/ அசைவம் (இராஜதானி/ சதாப்தி விரைவு வண்டி) |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் விபரம் (பயணச்சீட்டு வழங்கப்பட மாட்டாது)

| வ. எண். | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |

## தொடர் பயணம்/திரும்பும் பயண விவரங்கள்

வண்டி எண்/பெயர்.................................................... பயண தேதி....................................

வகுப்பு......................புறப்படும் இடம்.......................... சேரும் இடம்...........................

விண்ணப்பதாரர் பெயர்....................................................

விலாசம்....................................................

....................................................

தொலைபேசி எண்....................................................

கையொப்பம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

விண்ணப்ப படிவ எண்.......................................... பயணச்சீட்டு எண்..........................

இருக்கை எண்.......................................... வசூலிக்கப்பட்ட தொகை ரூ..........................

ரயில்வே அலுவலர் கையொப்பம்..........................

குறிப்பு :— (1) ஒரு படிவத்தில் அதிகபட்சம் 6 பயணிகள் பெயர்கள் மட்டும் எழுதவும்
(2) ஒருவர் ஒரு விண்ணப்பபடிவம் மட்டும் கொடுக்க வேண்டும்
(3) கவுண்ட்டரை விட்டு போகும்போது பயணச்சீட்டு மற்றும் மீதி தொகையை சரிபார்க்கவும்
(4) முறையாக நிரப்பப்படாத விண்ணப்பபடிவம் ஏற்க இயலாது
(5) விரும்பும் இருக்கை இருக்கும் இடவசதியைப் பொறுத்து அமையும்
(6) ஒரே பயணச்சீட்டில் பதிவு செய்த பயணிகள் அனைவருக்கும் வகுப்புமேம்பாட்டின்போது இருக்கைகள் அருகருகே கிடைக்கலாம் கிடைக்காமலும் போகலாம்
(7) கர்ப்பிணி பெண் தனிமையில் பயணிப்பதானால் மருத்துவச்சான்றிதழ் அளித்து தாழ்நிலை படுக்கை வசதியை பெற்றுக்கொள்ளலாம்

கேள்வி எண் : 39

அ. வாழ்வியல் சூழலைப் படித்து விடை எழுது.

ஆ. சூழலைப் படித்து விடை எழுதுக.

சூழல் - 1

## இயல் -2

## மறுத்தல் திறன்

அ. மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். வீட்டில் அடிக்கடி பணம் கேட்டுத் தொந்தரவு செய்கிறான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா?
2. நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும்?
3. மாறன் நிலையில் நீ இருந்தால் என்ன செய்வாய்?

விடைகள்:

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரிதான்
2. நாம் நற்பண்புகள் நினைந்தவர்களைத் தேடி நட்புக் கொள்ள வேண்டும்.
3. பெற்றோர் என்மீது வைத்திருக்கும் நம்பிக்கையும், நன்மதிப்பும் எந்நாளும் மாறாமல் இருக்கும் வகையில் நடந்து கொள்ள முயற்சி செய்வேன். தீய நட்புறவுகளை மெல்ல மெல்லக் களைந்து, நல்ல நட்புறவுகளைத் தேடிப் பழகத் தொடங்குவேன்.

ஆ. உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கும் புகைபிடித்தல் போன்ற செயல்களில் ஈடுபட உங்கள் நண்பர்கள் உங்களை அழைக்கிறார்கள். அப்போது நீங்கள் எவ்வாறு நடந்து கொள்வீர்கள்?

1. இது போன்ற சூழலில் நீங்கள் என்ன செய்வீர்கள்?
2. நண்பருடனான நீங்கள் என்ன செய்வீர்கள்?

அ. நண்பருடனான நட்பு நீடிக்க வேண்டும். எனவே அவர்களின் பேச்சுக்கு உடன்படுவேன்

ஆ. நீங்கள் செய்வது தவறு. இதனை அனைவரிடமும் வெளிப்படுத்தி விடுவேன் என்று கூறுவேன்.

இ. எனக்கு இது போன்ற செயல்களில் விருப்பம், கிடையாது என்று மென்மையாக மறுத்து விடுவேன்.

விடை:

இ. எனக்கு இது போன்ற செயல்களில் விருப்பம் கிடையாது என்று மென்மையாக மறுத்து விடுவேன்

ii. உங்கள் நண்பர்களைத் திருத்த ஏதேனும் முயற்சிகள் எடுப்பீர்களா? ஆம். நிச்சயம் எடுப்பேன். புகைப்பிடிப்பதினால் ஏற்படும் நோய்களைப் பற்றி எடுத்துக் கூறுவேன். இளைய வயதில் கொடிய பழக்கங்களுக்கு ஆளானால், எதிர்கால வாழ்க்கையே வீணாகிவிடும் என்று வலியுறுத்திக் கூறுவேன்.

## இயல் - 3

## பிறர் நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல்

அன்பரசி, பள்ளிக்குச் செல்லும் வழியில் அந்தக் காட்சியை நாள்தோறும் காணத் தவறுதில்லை. கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர், சாலை ஓரத்தில் உட்கார்ந்திருப்பார்.

அவருடைய கைகள் இரண்டும், கூடை முடைதலில் விரைவாகச் சுழன்று கொண்டிருக்கும். எப்பழ இவரால் இவ்வளவு விரைவாகச் செயல்பட முடிகிறது என்று அன்பரசி வியப்படைவாள்.

ஒரு நாள், தன் இரு கண்களையும் கட்டிக்கொண்ட அன்பரசி, வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின் மீது மோதிக் கொண்டாள். அப்போது தான் அவர்கள் எத்தயை துன்பத்தை அடைகிறார்கள் என்று எண்ணிப் பார்த்து மனம் வருந்தினாள்.

வினாக்கள்:

1. அன்பரசி நாள்தோறும் கண்ட காட்சி யாது?
2. மூதாட்டி என்ன செய்து கொண்டிருந்தார்?
3. அன்பரசி வீட்டில் எதைச் செய்து கொண்டிருந்தாள்?
4. அன்பரசி எதற்கு மனம் வருந்தினாள்?
5. மாற்றுத் திறனாளிகளிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள்?

விடைகள்:
1.அன்பரசி நாள்தோறும் பள்ளிச்குச் செல்லும் வழியில் பார்வை இழந்த மூதாட்டி ஒருவரைப் பரிவுடன் பார்த்துச் செல்வாள்.
2. மூதாட்டி சாலையில் அமர்ந்து கொண்டு, கூடை முடையும் தொழிலைச் செய்து கொண்டிருந்தாள்.
3. அன்பரசி வீட்டில் தன் இரு கண்களையும் கட்டிக்கொண்டு, பார்வையற்றவர் போல் அங்குமிங்கும் நடந்தது பார்த்தாள்
4.பார்வையற்றவர்கள் வழியில் இருப்பதைப் பற்றி அறிய முடியாமல் துன்பப்படுகிறார்களே என்று அன்பரசி மனம் வருந்தினாள்.
5. மாற்றுத்திறனாளிகளிடம் பரிவுடன் நடந்து கொள்வேன் அவர்களுக்கு வேண்டிய உதவிகளை என்னால் இயன்ற அளவு செய்து மனமகிழ்ச்சி அடைவேன்

**இயல் - 4**

**முடிவெடுக்கும் திறன்**

பதினோராம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகிறது. தேவி அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்து விட்டன. ஆனால், அவள் பெற்றோர் அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை.
"நான் சொன்னால் சொன்னது தான் நீ படித்தது போதும். இன்னும் மூன்று மாதத்தில் உனக்கு திருமணம் செய்ய வேண்டியது தான்" என்று கூறியவாறே அவளுடைய தந்தை வெளியே சென்று விட்டார்.
"அப்பா உனக்கு நல்லது தான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்" என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள் தேவி.
வினாக்கள்:
1. தேவி எதற்காக அழுதபடியே இருந்தாள்?
2. இந்நிலையில் தேவி என்ன முடிவெடுப்பாள்?
3. உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால், நீங்கள் எப்படித் தீர்வு காண்பீர்கள்?
விடைகள்:
1. தேவி தன் படிப்பானது பாதியிலே நின்று விடப் போகிறதே என்று எண்ணி அழுதபடியே இருந்தாள்.
2. படிப்பை தொடர்வதில் தான் தேவி உறுதியாய் இருப்பாள். அதற்கான வழிமுறைகளைத் தேடி விரைந்து செயல்படுவாள்.
3. பெற்றோர்களுக்கு உறுதுணையாயிருக்கும் உறவுமுறைப் பெரியவர்களிடம் சென்று பெண்கல்வியின் அவசியத்தை எடுத்துரைப்பேன்.
கேள்வி எண்: 40
கடிதம் எழுதுதல்
1. நும் ஊரில் குடிநீர் வசதி செய்து தர வேண்டி ஊராட்சி ஆணையருக்கு ஒரு விண்ணப்பம் வரைக.
2. நும் ஊரில் சாலை வசதி செய்து தர வேண்டி நகராட்சி ஆணையருக்கு ஒரு விண்ணப்பம் வரைக.
3. சாலைகளில் மின்விளக்கு வசதி வேண்டி விண்ணப்பம்.
4. பேருந்து வசதி வேண்டி விண்ணப்பம்.
5. மாற்று சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் ஆசிரியருக்கு விண்ணப்பம்.

**கடிதம் எழுதுதல்**

**அலுவலகக்கடிதம்**

அனுப்புநர்
அ அ அ
ஆ ஆ ஆ
இ இ இ

பெறுநர்
( துறை சம்பந்தமாக)
மதிப்பிற்குரிய ஐயா,
பொருள்: ________________________ சம்பந்தமாக.
________________________________________
________________________________________
________________________________________

நன்றி

தங்கள் உண்மையுள்ள
அ அ அ

உறைமேல் முகவரி
பெறுநர்
(துறை சம்பந்தமாக)

**நண்பனுக்கு கடிதம்**

சென்னை
4.5.2013

அன்புள்ள தோழி,
நலம் நலமறிய ஆவல் ______________________________________________
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________
______________________________________________________________

அன்புள்ள
அ அ அ

உறைமேல் முகவரி
பெறுநர்
ஆ ஆ ஆ
த/பெ. இ இ இ
27, வ.உ.சி தெரு
அடையாறு
சென்னை - 20

1. நும் ஊரில் குடிநீர் வசதி செய்து தருமாறு ஊராட்சி ஒன்றிய ஆணையருக்கு விண்ணப்பம் வரைக.

குடிநீர் செய்து தர வேண்டி விண்ணப்பம்

விடுநர்:
ஊர்ப் பொதுமக்கள்,
மேல்களத்தூர்
அரக்கோண வட்டம்
வேலூர்(மா) 632502.

பெறுநர்:
உயர்மிகு ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்கள்
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
நெமிலி - 631051.
அரக்கோணம் வட்டம்

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** குடிநீர் செய்து தர வேண்டுதல் சார்பாக.

வணக்கம். எங்கள் ஊராகிய மேல்கத்தூர் அரக்கோண வட்டத்தில் அமைந்துள்ளது. எங்கள் ஊரின் மக்கள் தொகை நான்காயிரம் பேர் ஆகும்.

எங்கள் ஊரிலுள்ள கிணறுகளில் தண்ணீரின் அளவு மிகவும் குறைந்து விட்டது. மேலும் ஊரின் கண் உள்ள இரு குளங்களும் மாசடைந்து விட்டன. குடிநீர் தேவைக்காக இரண்டு கிலோ மீட்டர் சென்று வர வேண்டியுள்ளது. மக்கள் அனைவரும் போதுமான குடிநீர் வசதியின்றி நாள்தோறும் பெரும்

அவதிப்படுகின்றனர். எனவே தாங்கள் தயைகூர்ந்து எங்கள் ஊரில் ஆழ்துளைக் குழாய்க் கிணறு அமைத்து, மேல்நீர்த் தேக்கத் தொட்டி ஒன்றினையும் கட்டித் தரும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

**நன்றி**

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
ஊர்பொதுமக்கள்
மேல்களத்தூர்.

இடம்: மேல்களத்தூர்
நாள்: 01.04.2014
உறை மேல் முகவரி
பெறுநர்:

உயர்மிகு ஊராட்சி ஒன்றிய ஆணையர் அவர்கள்,
ஊராட்சி ஒன்றிய அலுவலகம்
நெமிலி - 631051, அரக்கோண வட்டம்.

3. பழுதுபட்ட சாலையைச் சீரமைத்துத் தரவேண்டி நகராட்சி ஆணையருக்கு விண்ணப்பம் வரைக.

பழுதுபட்ட சாலையைச் சீரமைத்துத் தர வேண்டி விண்ணப்பம்

திருத்தணிகை
08.01.14

விடுநர்:

செயலாளர்,
அண்ணா மக்கள் மன்றம்,
108, ம. பொ. சி சாலை
திருத்தணிகை - 631209.

விடுநர்:

உயர்மிகு நகராட்சி ஆணையர் அவர்கள்
நகராட்சி அலுவலகம்
திருத்தணிகை - 631209.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்:** பழுதுபட்ட சாலையைச் சீரமைத்துத் தரவேண்டுதல் சார்பாக

வணக்கம் திருத்தணிகையில் கடந்த ஆண்டு பெய்த பலத்த மழையினால் சாலைகள் யாவும் மிகவும் பழுதடைந்து போயுள்ளன. அதிலும் முக்கியமாக ம.பொ.சி சாலை தொடங்கி நகராட்சி எல்லையிலுள்ள சித்தூர்சாலை வரை சாலைகளும் நெருக்கங்களும், மிகவும் சீர்கேடான நிலையை எய்தியுள்ளன. பழுதடைந்த சாலையில் ஊர்திப் போக்குவரத்து பெருமளவு இருப்பதால் மேலும் அச்சாலைகள் குண்டும் குழியுமாக மாறிவிட்டன. திருத்தணிகை ஒரு சுற்றுலா நகரம் என்பதால், வெளியூரிலிருந்து வரும் மக்கள் எல்லோரும் இச்சாலைகளைக் கண்டு முகம் சுளிக்கின்றனர். மேலும் சாலைகளில் அவ்வப்போது நீர்த்தேங்கி நிற்பதால், பள்ளம் மேடு எதுவென்று அறியாமல் ஊர்திகளும் திடீரென விபத்துகளில் சிக்குகின்றன. எனவே தாங்கள் இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, பழுதுபட்ட இச்சாலைகளைச் சீரமைத்துத் தருமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
செயலாளர்
அண்ணா மக்கள் மன்றம்

இடம் திருத்தணிகை
நாள்: 08.01.2014

உறைமேல் முகவரி
பெறுநர்:
உயர்மிகு, நகராட்சி ஆணையர் அவர்கள்

திருத்தணிகை - 631209.
திருவள்ளுவர் மாவட்டம்.

4. நும் ஊரில் சாலைகளில் மின்விளக்கு வசதி வேண்டி மின்வாரியத் தலைவரும் விண்ணப்பம் வரைக.

சாலைகளில் மின்விளக்கு வசதி வேண்டி விண்ணப்பம்

பாரதிதாசன் நகர் பம்மல்,
05.05.14

விடுநர்:
அ. வெற்றி மாறன்
(ஊர்ப் பொதுமக்கள் சார்பாக)
பாரதிதாசன் நகர்,
பம்மல், சென்னை 600 075.

பெறுநர்:
உயர்மிகு மின்வாரியத் தலைவர்,
தமிழ்நாடு மின்வாரியம்,
அண்ணாசாலை, சென்னை - 600 006.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்:** சாலைகளில் மின்விளக்கு வசதி வேண்டி விண்ணப்பித்தல் சார்பாக.

வணக்கம். சென்னையிலுள்ள பல்லாவரத்தை அடுத்துள்ள பம்மலில் உள்ளது எங்கள் பாரதிதாசன் நகர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு உருவான புதுநகர் தான் இந்தப் பாரதிதாசன் நகர். அன்றாடத் தேவைகளுக்காகவும், பணி நிமித்தமாகவும் பம்மலுக்குத் தான் அடிக்கடி சென்று வர வேண்டிய நிலையில் எங்கள் நகர்மக்கள் உள்ளனர். பகல் பொழுதில் இதனால் எந்த இடையூறும் இல்லை. ஆனால், இரவு வேளை வந்தாலே மக்கள் ஒருவகை அச்சத்துடனே சென்று வர வேண்டிய நிலையில் உள்ளனர். திருட்டுத் தொல்லை, நஞ்சுயிர்களின் நடமாட்டம் பெருமளவு இச்சாலைகளில் உள்ளது. பாரதிதாசன் நகருக்கும் பம்மலுக்கும் இடையேயுள்ள சாலைகளில் மின்விளக்கு வசதியின்மையால் மக்கள் பெரும் அவதிப்படுகின்றனர் எனவே, தாங்கள் தயைகூர்ந்து இக்கருத்தினை ஏற்று, எங்கள் நகரிலுள்ள சாலைப்பகுதிகளில், மின்விளக்கு வசதியினை விரைந்து செய்து தருமாறு, பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
அ. வெற்றிமாறன்
(ஊர்ப் பொதுமக்கள் சார்பாக)

பம்மல்,
05.05.14

உறைமேல் முகவரி:
பெறுநர்:
உயர்மிகு மின் வாரியத் தலைவர்,
தமிழ்நாடு மின்சார வாரியம்,
அண்ணாசாலை,
சென்னை - 600 006

5. பேருந்து வசதி வேண்டிப் போக்குவரத்துக் கழக மேலாண்மை இயக்குநருக்குக் கூட்டு விண்ணப்பம் வரைக.

பேருந்து வசதி வேண்டி கூட்டு விண்ணப்பம்

அன்வர் தீன் - கான் பேட்டை
02.02.14

விடுநர்:
ஊர்ப்பொதுமக்கள்,
அன்வர் தீன் - கான் பேட்டை
அரைக்கோணம் வட்டம்
வேலூர் மாவட்டம் - 632 502.

பெறுநர்:

உயர்மிகு மேலாண்மை இயக்குநர் அவர்கள்,
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்
பல்லவன் இல்லம், சென்னை - 600 002.
மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்:** பேருந்து வசதி வேண்டி விண்ணப்பித்தல் சார்பாக

வணக்கம். எங்கள் ஊராகிய அன்வர் தீன் - கான் பேட்டையில் ஐயாயிரம் மக்கள் வசித்து வருகின்றனர். எங்கள் ஊரிலிருந்து அரக்கோணம் திருத்தணிக்குப் போதுமான அளவிற்குப் பேருந்து வசதி உள்ளது. ஆனால் அண்டை ஊரான் சோளிங்கருக்கு உரிய பேருந்து வசதி சரியான முறையில் இல்லை. சோளிங்கருக்கு செல்ல 'சாலை' என்கிற ஊருக்குச்சென்று அங்கிருந்து இன்னொரு பேருந்து பிடித்துச் செல்ல வேண்டியுள்ளது. கோவில் நகரமாகிய சோளிங்கருக்கு எங்கள் ஊர் மக்கள் கல்வி, வணிகம் ஆன்மீகம், பணி உள்ளிட்ட பல்வேறு தேவைகளுக்காகப் பெருமளவு சென்று வருகின்றனர். எனவே, தாங்கள் இத்தேவையைக் கருத்தில் கொண்டு, அன்வர் தீன் - கான் பேட்டையிலிருந்து, சோளிங்கருக்கு ஒரு பேருந்தை நாள் முழுவதும் இயக்கும் படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

இங்ஙனம்

அன்வர் தீன் கான் பேட்டை, ஊாப் பொதுமக்கள்
02.02.14 அன்வர் தீன் - கான் பேட்டை

உறைமேல் முகவரி:
பெறுநர்:
தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம்
பல்லவன் இல்லம், சென்னை- 600 002.

6. மாற்றுச் சான்றிதழ் கோரித் தலைமை ஆசிரியருக்கு விண்ணப்பம் வரைக.

மாற்றுச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பம்

சோளிங்கர்
30.05.2014.

விடுநர்:
அ. வள்ளியம்மை
19, குமரன் தெரு,
சோளிங்கர் - 631102.
வேலூர் மாவட்டம்.
பெறுநர்:
உயர்மிகு, தலைமையாசியர் அவர்கள்
அரசு மகளிர் பள்ளி,
சோளிங்கர்- 631102.
வேலூர் மாவட்டம்
மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்:** மாற்றுச் சான்றிதழ் வேண்டுதல் சார்பாக

வணக்கம். நான் தங்கள் பள்ளியில் 2011 -2012 ஆம் ஆண்டு பத்தாம் வகுப்புப் படித்தேன். அரசு பொதுத் தேர்வில் வெற்றிப் பெற்றுள்ளேன். நான் மேனிலை வகுப்பில் என் கல்வியைத் தொடர விரும்புவதால் மாற்று சான்றிதழ் தேவைப்படுகிறது. எனவே, தாங்கள் தயைகூர்ந்து எனக்கு மாற்றுச் சான்றிதழை வழங்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி

இப்படிக்கு,

சோளிங்கர் தங்கள் உண்மையுள்ள,
30.05.2014 அ. வள்ளியம்மை
பெற்றோர்/ பாதுகாவலர் கையொப்பம்

வணிக கடிதம்

6. தட்டச்சர் பணிக்கு விண்ணப்பிக்க தன் விவரப்பட்டியல் தயாரித்து அனுப்புக.

தட்டெச்சர் பணி வேண்டி விண்ணப்பம்

திருப்பத்தூர்
04.03.14.

விடுநர்

மு. கயல்விழி,
35, நரசிங்கராவ் காலனி,
திருப்பத்தூர்
வேலூர் மாவட்டம்.

பெறுநர்:

உயர்மிகு அலுவலகம்
திருப்பத்தூர் - 635601.
வேலூர் மாவட்டம்

மதிப்பிற்குரிய ஐய ா,

**பொருள்:** தட்டெச்சர் பணி வேண்டி விண்ணப்பித்தல் சார்பாக.

தன்விவரப் - பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | மு. கயல்வழி |
| 2. தந்தை பெயர் | : | ஆ. முத்துராமன் |
| 3. பிறந்த நாள் | : | 04.06. 1988 |
| 4. பாலினம் | : | பெண் |
| 5. கல்வித்தகுதி | : | + தேர்ச்சி |
| 6. தொழில் நுட்ப கல்வித் தகுதி | : | தட்டச்சு - தமிழ் - மேனிலை<br>தட்டச்சு - ஆங்கிலம் - மேனிலை |
| 7. பணி அனுபவம் | : | இரண்டு ஆண்டுகள்<br>(ஊராட்சி ஒன்றிய அலுவலம் ஆம்பூர்) |
| 8. அஞ்சல் முகவரி | : | 35, நரசிங்கராவ் காலனி,<br>திருப்பத்தூர் - 635601.<br>வேலூர் மாவட்டம். |

மேற்கண்ட எனது தன் விவரப் பட்டியலை ஆய்ந்து, தட்டச்சர் பணிக்கு என் விண்ணப்பத்தை ஏற்றுப் பரிசீலிக்க வேண்டுகின்றேன். தாங்கள் எனக்கு இப்பணியை வழங்கினால், உண்மையோடு உழைப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.

நன்றி

இப்படிக்கு,

திருப்பத்தூர்
04.03.12

தங்கள் உண்மையுள்ள,
மு. கயல்விழி.

உறைமேல் முகவரி

பெறுநர்:

உயர்மிகு நகராட்சித் தலைவர் அவர்கள்,
நகராட்சி அலுவலகம்,
திருப்பத்தூர்- 635601.
வேலூர் மாவட்டம்

7. நூலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப் பட்டியல் தயாரித்து எழுதுக.

நூலக உதவியாளர் பணி வேண்டி விண்ணப்பம்

வேளச்சேரி
08.02.14

விடுநர்:

ச. இளங்கோவன்
42, எழில் நகர்,
வேளச்சேரி
சென்னை - 600 042.

பெறுநர்:

உயர்மிகு தலைவர் அவர்கள்,
ரோஜா முத்தையா நூலகம்,
தரமணி, சென்னை - 600 113.
மதிப்பிற்குரிய ஐயா,

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்:** நூலக உதவியாளர் பணிவேண்டி விண்ணப்பித்தல் சார்பாக.

தன்விவரப் - பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | ச. இளஞ்செழியன் |
| 2. தந்தைபெயர் | : | கா. சந்தன பாண்டியன் |
| 3. பிறந்த நாள் | : | 03.03.1987 |
| 4. பாலினம் | : | ஆண் |
| 5. கல்வித் தகுதி | : | + 2 தேர்ச்சி |
| 6. தொழில் நுட்பக் கல்வித்தகுதி | : | நூலக அறிவியலில் சான்றிதழ் படிப்பு, மற்றும் கணினி இயக்குதலில் பட்டயப் பயிற்சி |
| 7. பணி அனுபவம் | : | ஓராண்டு (அழகு முத்து கலைஅறிவியல்) |
| 8. அஞ்சல் முகவரி | : | 42, எழில் நகர்<br>வேளச்சேரி<br>சென்னை - 600042. |

மேற்கண்ட எனது தன் விவரப்-பட்டியலை ஆய்ந்து, நூலக உதவியாளர் பணிக்கான என் விண்ணப்பத்தை ஏற்றுப் பரிசீலிக்க வேண்டுகின்றேன். தாங்கள் எனக்கு இப்பணியை வழங்கினால், உண்மையோடு உழைப்பேன் என்று உறுதி கூறுகின்றேன்.

நன்றி

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
ச. இளஞ்செழியன்

வேளச்சேரி
08.02.14

உறைமேல் முகவரி:

பெறுநர்:
உயர்மிகு தலைவர் அவர்கள்,
ரோஜா முத்தையா நூலகம்,
தரமணி, சென்னை - 600113.

9. கணினி அலுவலகத்தில் கணினி இயக்குபவர் பணிக்கு விண்ணப்பிக்க தன் விவரப் பட்டியலை அனுப்புக.

கணினி இயக்குபவர் பணி வேண்டி விண்ணப்பம்

திருவண்ணாமலை,
10.05.14

விடுநர்:

ம. தென்னரசு,
108, அகத்தியர் வீதி,
திருவண்ணாமலை - 606 601.

பெறுநர்:

உயர்மிகு மேலாண்மை இயக்குநர் அவர்கள்,
பூமடல் - தமிழ் மென்பொருள் நிறுவனம்,

டைடல் பார்க், தரமணி
சென்னை - 600113.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள்:** கணினி இயக்குபவர் பணி வேண்டி விண்ணப்பித்தல் சார்பாக.

தன்விவரப் - பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. பெயர் | : | ம. தென்னரசு |
| 2. தந்தைபெயர் | : | தே. மன்னர் மன்னன் |
| 3. பிறந்தநாள் | : | 06.03.1985 |
| 4. பாலினம் | : | ஆண் |
| 5. கல்வித்தகுதி | : | இளநிலை கணினி அறிவியல் (B.Sc., Computer Science) முதல் வகுப்பில் தேர்ச்சி |
| 6. பணி அனுபவம்: | | இரண்டு ஆண்டுகள் (முல்லை கணினி நிறுவனம் கடலூர்) |
| 7. அஞ்சல் முகவரி: | | 108, அகத்தியர் வீதி திருவண்ணாமலை - 606. |

மேற்கண்ட எனது தன்விவரப் - பட்டியலை ஆய்ந்து, கணினி இயக்குபவர் பணிக்கு என் விண்ணபத்தை ஏற்றுப் பரிசீலிக்க வேண்டுகின்றேன். தாங்கள் எனக்கு இப்பணியை வழங்கினால், உண்மையோடு உழைப்பேன் என உறுதி கூறுகின்றேன்.

நன்றி

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
ம. தென்னரசு

திருவண்ணாமலை,
10.05.2014

உறைமேல் முகவரி:
பெறுநர்:
உயர்மிகு, மேலாண்மை இயக்குநர் அவர்கள்
பூமடல் - தமிழ் மென்பொருள் நிறுவனம்
டைடல் பார்க், தரமணி,
சென்னை - 600 113.

## உறவுமுறைக் கடிதங்கள்

10. நீ கண்டுகளித்த இடம் குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

15, வள்ளலார் வீதி,
காமராசர் நகர்,
விழுப்புரம்.
11.05.2014

அன்புள்ள நண்பனுக்கு !

உன் இனிய நண்பன் தமிழ்செல்வன் எழுதிக் கொண்ட கடிதம். நலம் நலமறிய ஆவல். உன் அப்பா, அம்மா, தம்பியை நலம் விசாரித்ததாகக் கூறவும். கடந்த வாரம் எங்கள் பள்ளியின் சார்பாக மாணவர்கள், ஆசிரியர்கள் புடைசூழ்ந்தவாறு சுற்றுலா சென்றிருந்தோம். எந்த ஊர் என்று கேட்கிறாயோ? ஆம்! சங்கத்தமிழ் வளர்த்த நான்மாடக் கூடலாகிய மதுரை மாநகர் தான்.

நாங்கள் மதுரை மாநகர் புகுந்தவுடன், வைகையாறு எங்களை வாருங்கள்! வாருங்கள்! என்று தன் அலைக்கரங்களால் வரவேற்றது. எங்களின் மெய் இன்புறும் வகையில் குளிர்க் காற்றினை வீசச் செய்து விருந்தோம்பல் புரிந்தது. மதுரையிலுள்ள பெரும்பாலான தெருக்கள் யாவும் தேரோடும் வகையில் நீண்டும், அகன்றும் இருந்தன. ஓங்கி உயர்ந்த கட்டடங்களும், வேலைப்பாடுகளுடன் கூடிய மாட மாளிகைகளும் ஒரு சேர நின்று மாமதுரை பழைமை வாய்ந்த பெருநகர் என்றே பறை சாற்றின.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலையும், அக்கோவிலைச் சுற்றியுள்ள கோபுரங்களையும் சுற்றுச் சுற்றிப் பார்த்து வரலாற்றுப் பரவசமும், ஆன்ம இறைதேடலும் எய்தினோம். அக்கோவிலின் அருகிலிருந்த புதுமண்டபம் சென்று ஆளுக்கொரு நூல் வாங்கி மகிழ்ந்தோம். மேலும் பொற்றாமரை குளம், அழகர் கோவில், நாயக்கர் மகால், தெப்பக்குளம் போன்ற இடங்களை கண்கள் குளிரும் வகையில் கண்டு

மகிழ்ந்தோம் பாண்டியர்- நாயக்கர் மன்னர்களின் வரலாற்றுச் சுவடுகளை அறிந்து கொண்டோம்.

வடநாட்டவரும், வெளிநாட்டவரும் வந்து குவியும் மதுரையின் பேரழகை இருநாள் முழுவதும் கண்டுகளித்து, திருப்தியான மனநிலையுடன் சுற்றுலாவை நிறைவு செய்து வீடு வந்து சேர்ந்தோம். மதுரையில் நாங்கள் எடுத்துக் கொண்ட நிழற்படங்கள், என்றும் எங்களுக்கு அந்தப் பசுமையான நினைவுகளைத் தந்து கொண்டே இருக்கும். நீயும் இது போல் சுற்றுலா சென்றிருந்தால், அது குறித்து மறக்காமல் எனக்கு எழுது. சரியா ! .........

இப்படிக்கு,
உன் நண்பன்,
கி. தமிழ்ச்செல்வன்.

உறைமேல் முகவரி:
பெறுநர்:
கு.பூங்குன்றன்,
த/பெ.குமரவேலு,
102,பாரதிதாசன் வீதி,
கடலூர்- 607001.

11. பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

28, கண்ணதாசன் தெரு
திருமுல்லை வாயில்
சென்னை- 600 062.
28.05.2014

அன்புள்ள நண்பனுக்கு !

உன் இனிய நண்பன் முகிலன் எழுதிக் கொண்ட கடிதம். நலம் நலமறிய ஆவல். உன் அப்பா, அம்மா, தம்பியை நலம் விசாரித்தாகக் கூறவும்.

பத்தாம் வகுப்புத் தேர்வு முடிவு நாளன்று, நான் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். யார் பத்தாம் வகுப்புத் தேர்வில் தமிழ்நாட்டில் முதலிடம் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறிய ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தேன். அப்போது உன் பெயரை அறிவித்து, உன் நிழற்படத்தைக் காட்டிய போது, பெருமகிழ்ச்சி அடைந்தேன். மேலும், உன் பேட்டியை ஒளிப்பரப்பிய போது, என் குடும்பத்தாரும் அதனைக் கண்டு மகிழ்ந்தார்கள் மறுநாள் செய்தித் தாள்களிலும் நீயே நிறைந்திருந்தாய் அப்போது நீ மாவட்ட ஆட்சியராகிய மக்களுக்கு மக்களுக்குத் தொண்டு புரிவதே எதிர்கால இலக்கு" என்று கூறியது எல்லோரையும் பெருமகிழ்ச்சியில் ஆழ்த்தியது!

தமிழக அரசும் உன் சாதனையைப் போற்றி, உன் படிப்புச் செலவு அனைத்தையும் ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது என்பது மேலும் ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தி, பல்வேறு தரப்பினரின் பாராட்டுகளையும், பரிசுகளையும், விருதுகளையும் பெற்று நீ பேரின்பத்தின் பரவசத்தில் மூழ்கியிருப்பாய் என்றே கருதுகின்றேன். என் நண்பனாகிய உன் வெற்றியை எண்ணி, நானும் மகிழ்ந்து கொண்டாடினேன். வருகின்ற நல்வாய்ப்புகளை எல்லாம், பயன்படுத்திக் கொண்டு, நீ மேன் மேலும் வாழ்வில் முன்னேற வேண்டும். வாழ்வில் உயர்நிலையாகிய சிகரங்களை எல்லாம் நீ தொட வேண்டும் என்பதே என் விருப்பம். எல்லோரின் விருப்பமும் அதுதான் என் பாராட்டுதலும் உனக்கு வலிமை சேர்க்கும் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்தி மகிழ்கின்றேன்.

இப்படிக்கு,
உன் அன்பு நண்பன்.
தமிழ். முகிலன்.

உறைமேல் முகவரி:
பெறுநர்:
ஆ. மதிவாணன்
த/பெ ஆறுமுகம்,
112/64, செரி சாலை,
சேலம் 636004.

12. நீவிர் படித்து மகிழ்ந்த நூல் பற்றி உன் நண்பனுக்கு கடிதம் எழுதுக.

48, சன்னதி தெரு,
சோளிங்கர்- 631102,
வேலூர் மாவட்டம்
24.03.14.

அன்புள்ள நண்பனுக்கு!

உன் இனிய நண்பன் செழியன் எழுதிக் கொண்ட கடிதம் நலம் நலமறிய ஆவல், உன் அப்பா, அம்மா, தம்பியை விசாரித்ததாகக் கூறவும்.

நீ எழுதிய கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி அடைந்தேன். புதிய நூல் ஏதேனும் படித்திருந்தால், தகவல் சொல் என எழுதியிருந்தாய் நான் இந்த வாரம் கவிதை நூல்களையோ, வரலாற்று நூல்களையோ தேடிப் படிக்கவில்லை. காரணம் ஏப்ரல் முதல் வாரத்தில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வு தொடங்குகிறது அல்லவா? அதனைக் கருத்தில் கொண்டு என் மாமா படிப்பும் தேர்வும் என்னும் நூலை வாங்கி வந்து தந்திருந்தார். நானும் தேர்வு நோக்கில் அந்நூலை ஆர்வத்தோடு வாங்கிப் படித்தேன்.

தினமணி நாளிதழில் தொடராக வெளிவந்த அந்நூலை, மகேஸ்வரி பதிப்பகத்தார் வெளியிட்டிருந்தனர். "கடுகு சிறுத்தாலும் காரம் குறையாது" என்பது போல அந்நூல் சிறுநூலாய் இருந்தாலும் அளப்பறிய செய்திகளைக் கொண்டிருந்தது படிப்பது எப்படி? மனஒருமை, திட்டமிடுதல், நேரப்பயன்பாடு, உடன்பாடு உடன்நலம், ஞாபகசக்தி எழுத்துப் பயிற்சி, தேர்வு எழுதும் முறைகள் போன்ற பல்வேறு தலைப்புகளில் மாணவர்களுக்குத் தேவையான அத்தனை செய்திகளையும் எளிய நடையில் அந்நூல் கொண்டிருந்தது.

புரிதலைக் குறித்து விளக்கும் வகைகயில் அற்புதமான ஒரு கரை வேறு தரப்பட்டிருந்தது. அந்நூலைப் படித்தவுடன், எனக்கிருந்த தேர்வுப்பயம் நீங்கி, மனத் தெளிவு பிறந்தது. நான் தேர்வில் உச்ச மதிப்பெண்களைப் பெற அந்நூல் துணைபுரியும் என்று உறுதியாக நம்புகின்றேன். நீயும் அந்நூலை வாங்கிப் படித்து மனத்தெளிவும், மகிழ்ச்சியும் அடைவாயாக !

இப்படிக்கு,
உன் ஆருயிர் நண்பன்
பூ. செழியன்

உறைமேல் முகவரி:

உயர்மிகு கா. இறையன்பு
த/பெ. காண்டீபன்,
64,மேட்டுத் தெரு,
ஊற்றங்கரை - 635207,
கிருஷ்ணகிரி மாவட்டம்.

13. சுற்றுலா செல்ல அனுமதி வேண்டித் தந்தைக்குக் கடிதம்.

விடுதி அறை எண்:27
(தூய வளனார் விடுதி)
வேலூர் - 632 012.

அன்புள்ள அப்பாவிற்கு

தங்களின் அன்பு மகன் சுடா வண்ணன் எழுதும் கடிதம். இங்கு நானும், என் நண்பர்களும் நலம். அது போல் அம்மா, அக்கா, தம்பி ஆகியோரின் நலனை அறிய ஆவல்.

நான் படிப்பில் மேன்மேலும் முன்னேற்றம் அடைந்து வருகின்றேன். என்னுடைய மதிப்பெண் நிலவரத்தையும் அவ்வப்போது தங்களுக்குத் தெரிவித்தும் வருகின்றேன். மேலும் தங்களின் ஆலோசனைப்படி எழுத்து முறையில் நான செய்யும் தவறுகளைத் திருத்திக் கொண்டும் வருகின்றேன். ஆண்டு இறுதித் தேர்வில் உறுதியாய் முதல் மதிப்பெண் பெறுவதற்கான எல்லா முயற்சிகளையும் எடுத்துச் சிறப்பாகப் படித்தும் வருகின்றேன்.

எங்கள் பள்ளியிலிருந்து மதுரை, சிவகாசி,சிவகங்கை, கன்னியாகுமரி போன்ற இடங்களுக்குச் சுற்றுலா சென்றுவர, ஆசிரியர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். சுற்றுலா சென்று வர ஆயிரம் ரூபாய் தேவைப்படுகின்றது. தாங்கள் அனுமதித்தால், நானும் இச்சுற்றுலாவில் கலந்து கொண்டு உலக அறிவினை வளர்த்துக் கொள்வேன். எனவே,இச்சுற்றுலாவில் கலந்து கொள்ள அனுமதி தந்து, சுற்றுலாவிற்கு வேண்டிய பணத்தையும் பணவிடைத்தாள் மூலம் அனுப்பி வைக்க வேண்டுகின்றேன் .

இப்படிக்கு,
தங்களின் அன்புள்ள,
மு. சுடர்வண்ணன்

உறைமேல்முகவரி:

பெறுநர்:
கா. முருகவேல்,
10/26, கிழக்கு வீதி,
அசுரம் நகர்,
சென்னை - 600 118.

**கேள்வி எண்: 41**

1. கணினி தோற்றம் வளர்ச்சி - இணைய தள வசதி
2. சுற்றுக்சூழல் - மாசுக்காட்டுபாடு இயற்கை அழிதல்
3. மழைநீர் சேகரிப்பு
4. பெண் கல்வி - முன்னேற்றம் - பெண் உரிமை
5. அன்றாட வாழ்வில் அறிவியல்
6. நான் விரும்பும் கவிஞர்

## இயல் - 7

## அன்றாட வாழ்வில் அறிவியல்

கருத்துச் சட்டகம்

* முன்னுரை
* பொருளுரை — கண்டுபிடிப்புகள்
  அறிவியலின் பயன்கள்.
  அனைத்திலும் அறிவியல்
  ஆக்கத்திற்கு அறிவியல்
* முடிவுரை

முன்னுரை :

கற்கால மனிதர்கள் காய்கனிகளையும். கிழங்குகளையும், பச்சை மாமிசத்தையும் புசித்து வந்தனர். மரப்பட்டைகளையும்/ தழைகளையும் ஆடையாக உடுத்திக் கொண்டனர். மலைக் குகைகளில் வசித்தனர். எங்குச் சென்றாலும் நடந்தே சென்றனர். சுருங்கச் சொன்னால், கற்கால மக்கள் விலங்குகளைப் போல வாழ்ந்தனர். ஆனால் தற்கால மக்கள் விஞ்ஞான விந்தைகளால் எல்லாத் துறைகளிலும் முன்னேறி, வசதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்ந்து வருகின்றனர்.

கண்டுபிடிப்புகள்:

நம் முன்னோர்கள் சக்கரம் என்று கண்டுபிடிக்கப்பட்டதோ, அன்றே அறிவியல் வளரத் துவங்கிவிட்டது. கடந்த நூற்றாண்டில் மின்சாரம் என்று கண்டுபிடிக்கப்பட்டதோ, அன்றே அறிவியல் மேன்மை நிலையை அடைந்து விட்டது என்றே சொல்லாலாம்.

இக்காலத்தை "அறிவியல் யுகம்" என்பர். அறிவியல் அறிஞர்கள் பலர் தோன்றி வியத்தகு சாதனங்களைக் கண்டுபிடித்துள்ளனர். தாமஸ் ஆல்வா எடிசன் கிராமபோன், படக்காட்சி, மின்சார விளக்கு முதலியவற்றைக் கண்டுபிடித்தார். ஸ்டீவன்சன் புகை வண்டியையும், ஹென்றி போர்டு உந்து வண்டியையும், ரைட்சகோரதர்கள் ஆகாய விமானத்தையும் கண்டுபிடித்தனர். மார்க்கோனி வானொலியையும், ஜெ.எல். பெயர்டு தொலைக்காட்சியையும் கண்டு பிடித்தனர்.

அறிவியலின் பயன்கள்:

மின்சார அடுப்பும், எரிவாயு அடுப்பும் கண்டுபிடிக்கப்பட்டமையால் உணவு சமைப்பது எளிதாகியுள்ளது ; விரைவாகச் சமையல் செய்ய முடிகிறது. புகை வருவதில்லை ; பாத்திரங்களில் கரியும் படிவதில்லை.

மிதிவண்டி, உந்து வண்டி, இரயில், ஆகாய விமானம், கப்பல் முதலியனகண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் மக்கள் தரை, வானம், கடல் ஆகியவற்றின் மூலமாக எளிதாகவும், விரைவாகவும், பயணம் செய்ய முடிகின்றது. பக்கத்து நாடு பக்கத்து வீடு போலாகிவிட்டது. இதனால் உலக மக்களோடு தொடர்பு கொள்வது எளிதாகிவிட்டது.

அனைத்திலும் அறிவியல் :உணவு, உடல், உறைவிடம், வேளாண்மை, நெசவு மற்றும் பிற தொழில்கள், போக்குவரத்து,

தொலைத் தொடர்பு, மருத்துவம் என மக்களின் அடிப்படை வாழ்வியல் தேவைகள் அனைத்திலும் அறிவியல் புகுந்து விட்டது. மனித உழைப்புப் பெருமளவு பயன்படும் இடங்களில் எல்லாம். அறிவியலின் அச்சுப்பதிப்பாகிய இயந்திரங்கள் புகுந்துவிட்டன. இதனால் மனிதர்கள் உடலை வருத்தி, வியர்வை சிந்தி உழைக்க வேண்டிய தேவை குறைந்துவிட்டது. அறிவியல் வளர்ச்சிக் கருவிகள் இல்லையேல், மக்கள் ஒரு நாள் - ஒரு பொழுது - ஒரு நொடி கூட இனி வாழ முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்பதே உண்மையிலும் உண்மையாகும்.

ஆக்கத்திற்கே அறிவியல் :

அறிவு இயலே அறிவியல் என்று நாமறிவோம். மக்களின் வளர்ச்சிக்கும் உலகத்தின் ஆக்கத்திற்கும்தான் அறிவியல் பயன்பட வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்து யாருக்கும் இருக்க முடியாது. ஆனால், ஒரு சிலரின் செயல்பாடுகளால் அறிவியல் அழிவிற்குப் பயன்பட்டுக் கொண்டிருப்பது வருத்தத்தைக் தரக்கூடிய செய்தியாகும். சாதி, சமயம், இனம், மொழி என்கிற மானுடப் பிரிவுகள் அறிவியலை அழிவிற்குப் பயன்படுத்துவதை அறவே தடுத்து நிறுத்துதல் வேண்டும். "உயிர்கள் யாவும் இன்புற்ற வாழ்வதற்காகவே பிறந்திருக்கின்றன" என்றும் உண்மையை அவர்களின் ஆழ்மனம் அறிவு நிலையோடு உணர்ந்து தெளிந்திடல் வேண்டும்.

முடிவுரை :

காலையில் எழுந்தது முதல் இரவு படுக்கும் வரை அறிவியலால் வாழ்கிறோம். அறிவியலால் நகர்கிறோம் அறிவியலால் இயங்குகிறோம் ; அறிவியலால் அயர்கிறோம். அறிவியல் இன்றேல் மானுட வளர்ச்சியே இல்லை ; அறிவியல் இன்றேல் உலகில் ஆக்கப் பணிகளும் இல்லை. எனவே, அறிவியலை வளர்ப்போம் அதனை ஆக்கத்திற்கே பயன்படுத்துவோம்.

------------

## இயல் - 8

## நான் விரும்பும் கவிஞர் - பாரதிதாசன்

### கருத்துச் சட்டகம்

* முன்னுரை

* பொருளுரை பிறப்பும் வளர்ப்பும்
பாரதியுடன் பாரதிதாசன்
தமிழரின் குரல்
பாவேந்தரின் படைப்புகள்.

முன்னுரை :

"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு"

என கவிதை முழக்கமிட்டவர் பாவேந்தர் பாரதிதாசன். வீழ்ந்து கிடந்த தமிழகத்தை எழுச்சி கொள்ளச் செய்த பெருங்கவிஞர் அவர். தமிழ்த் தேசியப் பெருமையினைத் தரணியெங்கும் தம் பாக்களால் எடுத்துக் சொன்ன பெருமைக்குரியவர் அவர். அவரின் சிறப்பினை இக்கட்டுரையில் காண்போமாக !

பிறப்பும் வளர்ப்பும் :

புதுச்சேரி மாநிலத்தில் கனகசபை - இலக்குமி இணையருக்கு ஈடுஇணையற்ற புதல்வராய் 29-4-1891 இல் அவதரித்தார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். இவரது இயற்பெயர் கனக. சுப்புரத்தினம் என்பதாகும். புதுவையில் பிரெஞ்சுப் மொழிப் பள்ளியில் துவக்கக்கல்வி பயின்றார். தமிழில் ஆர்வம் மிகுந்து இருந்ததால், பதினாறாம் அகவையில் தமிழ்க்கல்லூரியில் சேர்ந்து, தமிழ்ப்புலவர் தேர்வில் வெற்றி பெற்றார். பிறகு, தமிழாசிரியாராக நீண்ட நெடுங்காலம் பணி செய்து, தமிழுக்குத் தொண்டு செய்தார்.

பாரதியுடன் பாரதிதாசன் :

மகாகவி பாரதியார் சுமார் பத்தாண்டு காலம் புதுச்சேரியில் வந்து தங்கியிருந்தார். பாரதியாரும் பாரதிதாசனும் ஒரு திருமண விழாவில் சந்தித்துக் கொண்டனர். அன்று முதல் உள்ளன்பால் இணை பிரியாதவர்களாக மாறினர். பாரதிதாசனின் கவிப்பெருமையை உணர்ந்த பாரதியார், "சுப்புரத்தினமோர் கவி" என்று தமிழ்கூறும் நல்லுலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார். பாரதியாரின் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். கனக. சுப்புரத்தினம்.

தமிழரின் குரல் :

"எங்கும் தமிழ் ; எதிலும் தமிழ்" என்பதே பாவேந்தரின் கொள்கை முழக்கமாக இருந்தது.

"தமிழர்களின் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும். தமிழரின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை போடும் மூட நம்பிக்கைகள் ஒழிக்கப்பட வேண்டும். தமிழரின் எழுச்சியே தமிழினத்தின் எழுச்சி என்றும் மங்காத தமிழ் உணர்வே தமிழரின் வளர்ச்சி என்னும் சீரிய கருத்துகளே அவர் குரலின் அடிநாதமாக இருந்தது. அதுமட்டுமல்லாமல், தமிழ் மண்ணைத் தமிழரே ஆள வேண்டும் என்கிற உணர்வுத் தாகமும் அவரிடம் மேலோங்கி இருந்து.

"தமிழாய்ந்த தமிழன்தான் தமிழ்நாட்டில்
முதலமைச்சராய் வருதல் வேண்டும்"

பாவேந்தரின் படைப்புகள் :

பாரதிதாசன் கவிதைகள், குடும்ப விளக்கு, இருண்ட வீடு, பாண்டியன் பரிசு, இசையமுது, அழகின் சிரிப்பு, குறிஞ்சித் திரட்டு, தமிழச்சியின் கத்தி, தமிழியக்கம் போன்றவை பாவேந்தர் படைத்தளித்த கவிதை நூல்கள் ஆகும். இரணியன் அல்லது இணையற்ற வீரன், பிசிராந்தையார் போன்ற நாடக இலக்கியங்களும் அவரால் படைக்கப்பட்டுள்ளன. பெரியாருடன் ஏற்பட்ட தொடர்பினால் அவரது கவிதை முழக்கம் புரட்சியோடும் பகுத்தறிவோடும் மிளிர்ந்தது.

முடிவுரை :

"தமிழுக்கு அமுதென்று பேர் ! அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்!"

என்று தமிழின் பெருமையை வானளாவிய உயரத்திற்குக் கொண்டு சென்றவர் பாவேந்தர் பாரதிதாசன் ஆவார். தமிழினத்தின் மறுமலர்ச்சிக்காக உழைத்த பாவேந்தரின் தொண்டினை நினைவு கூர்ந்து, நாமும் தமிழ்ப்பற்றோடு வாழ்வோமாக!.

---------

## மழைநீர் சேமிப்பு

முன்னுரை :

தெய்வப்புலவர், "நீரின்றி அமையாது உலகு" என்றார். சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள், "மாமழை போற்றுதும் என்றார். இவ்வாறு நீரின் இன்றியமையாமையையும், நீர் தருகின்ற மழையின் சிறப்பினையும் தமிழ்ப் புலவர்கள் காலந்தோறும் போற்றி வந்துள்ளனர்.

தண்ணீரின் இன்றியமையாமை :

குடிநீர் இல்லையென்றால் குடியிருப்பும் இல்லை. நீரில்லாத போதுதான் இன்னலும் இடம்பெயர்தலும் நிகழ்கின்றன. தவிக்கிற மக்களுக்கு மிகவும் தேவைப்படுவது தண்ணீரே "தாயிற் சிறந்ததொரு கோயிலும் இல்லை" என்பதுபோலத் தண்ணீரிலும் சிறந்ததொரு உயிர்க்காப்பும் இல்லை எனலாம்.

சேமிக்கும் முறை :

பயிரிடும் முறைகளை மாற்றியும், பாசன வழிமுறைகளை மாற்றியும், நீரைப் பயன்படுத்துகின்ற முறையினை மாற்றியும் பெரிய அளவில் நீரைச் சேமிக்கலாம். ஏரி, குளங்களை ஏற்றமுறையில் பாதுகாத்து நீர்வழிகளை அடைக்காமல், பரவலாகப் பெய்கின்ற மழைநீர் முழுவதும் நீர்நிலைகளை வந்தடைய ஆவண செய்ய வேண்டும். வீடுகளில் மழைநீரைச் சேமிப்பதற்குச் சேமிப்புத் தொட்டிகளை அமைத்து வீட்டைச் சுற்றியுள்ள பகுதிகளை மெழுகிய தளமாக மாற்றாமல், மணற்பாங்காகவோ, இயல்பான நிலப்பரப்பாகவோ விட்டுவிடுதல் வேண்டும்.

பயன்கள் :

பெய்த மழை நீரைத் தகுதியான வழிகளில் தேக்கி வைத்துப் பாதுகாப்பதால் நீர்வளத்தைப் பெருக்கலாம். "இன்றைய சேமிப்பு நாளைய தேவை" என்பதற்கேற்ப பருவ மழையானது பெய்யாது பொய்க்கும் போது, ஏற்படுகின்ற தண்ணீர்த் தட்டுப்பாட்டையும், தலைவிரித்தாடுகின்ற பஞ்சத்தையும் மழைநீர் சேகரிப்பால் ஈடுகட்ட இயலும்.

முடிவுரை:

நம் பாரத நாடு பழம் பெரும் நாடு. இந்நாட்டில் வாழும் நாம் விண்ணின் மழைத்துளி மண்ணின் உயிர்த்துளி என்பதை உணர்ந்து, ஒவ்வொருவரும் அரசுடன் சேர்ந்து மழைநீர் சேமிப்பில் ஈடுபட்டால் நாடு நலம் பெறும். நல்ல வளம் பெறும்.

---------

## காலத்தை வெல்லும் கணினி

முன்னுரை:

அறிவியலின் அற்புதப்படைப்பான கணினி இன்று மனித மூளையையும் விஞ்சி விட்டது. கண் இன்றியமையாத ஓர் உறுப்பு என்போம். கணினி கண்ணினும் மேலாகச் செயல்படுகிறது.

தோற்றம்:

கணினியின் முன்னோடி எனப்படுவது அபேக்ஸ் எனப்படும் சீனர்களின் அறிவியல் சாதனமாகும். மின்னனுக் கணினியை டாக்டர் ஆலன் எம் டூரிங், 1824 ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். ஹார்வர்டு பல்கலைகழகப் பேராசிரியர் டாக்டர் ஹோவன்ட் தற்போதைய கணினியை,1944 ஆம் ஆண்டு பிடித்தார். ஆனால் சூப்பர் கணினியை, 1976 ஆம் ஆண்டு அமெரிக்கரான வானடேசஸ் உருவமைத்தார்.

கணினியின் அற்புதம்:

அறிவியல், கணிதம், மருத்துவம், வணிகவியல் என அனைத்துத் துறைகளிலும் பயன்படும் நிலை கணினிக்கு உள்ளது. நூறு மில்லியன் கணக்குகளைச் சரிபார்க்கும் அளவிற்குக் கணினி வளர்ந்துள்ளது. மாற்ற இயலாத நாழிகை, நிமிடம், மணி, நாள், வாரம், வருடம் இவற்றையெல்லாம் தன்னுள் அடக்கி, இவ்வுலகையே கைக்கொள்ளும் திறன் கணினிக்கு உண்டு.

கணக்கிட இயலாதவற்றையும் கணக்கிடும் கணினி, ஏவுகணைகளையும், செயற்கைக் கோள்களையும் ஓரிடத்தில் இருந்தபடியே கட்டுப்படுத்தும் திறன் கொண்டுள்ளது.

கணினியின் சிறப்பறிந்து "தமிழக அரசு, தமிழ் இணையக் கழகம்" ஒன்யை உருவாக்கியுள்ளது. தமிழ் மொழியை அறிந்து கொள்ள ரோமனைஸ்டு என்ற விசைப்பலசை உண்டாக்கியுள்ளது.

முடிவுரை:

அனைத்துப் பள்ளிகளிலும் கணினிக் கல்வி தரமாகக் கற்பிக்கப்படுகிறது. கணினி மனித வாழ்க்கையின் உயிர்நாடியாகி விட்டது. கணினியை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்தி, வாழ்க்கையை வளமுடையதாக்குவோம்.

--------

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

முன்னுரை :

"சுத்தம் சுகம் தரும்", "சுத்தம் சோறு போடும்" என்னும் பழமொழிகள் தூய்மையின் மேன்மையை விளக்குவன ஆகும். நாம் வாழும் வீடு, தெரு, நகரம், நாடு ஆகியவற்றைத் தூய்மையாக வைத்துக் கொள்வது "சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு" எனப்படும்.

தூய்மை கெடுக்கும் மாசுக்கள் :

குப்பைகளும், சாக்கடைகளும் நிறைந்தால் நீரும் கெடும், நோயும் நம்மிடம் குடிகொள்ளும். ஆலைகள் வெளியேற்றும் கழிவுகளும், கழிவுநீரும் நிலத்தையும், நீரையும், காற்றையும் கெடுத்து விடுகின்றன. இயற்கைச் சூழ்நிலை மாறி, சமநிலைகெட்டு, உலகே அழியும் நிலையும் உருவாகும். இத்தகைய மாசுகள் நம் வாழ்க்கையை அனலிடைப் புழுபோல துயர முடையதாக்கி விடுகின்றன.

தூய்மைக்கு வழிகள்:

குப்பைகளைக் குழியில் கொட்டி எருவாக்கலாம் எரித்தும் விடலாம். சாக்கடை நீரைச் செடி கொடிகளுக்கும் செலுத்திப் பயனடையலாம். ஆலைக் கழிவுகள் அங்கேயே தூய்மைப்படுத்தி வெளியேற்றப்பட்ட வேண்டும். அதனால் ஈ, கொசு முதலிய நச்சுயிர்கள் தோன்றுவதைத் தடுக்கலாம். ஆலைகள் கக்கும் நச்சுப்புகைகளைக் கட்டுப்படுத்தலாம் தூய்மைப்படுத்தலாம், அனைவருக்கும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளைக் கட்டாயம் பின்பற்றி நடக்குமாறு அரசு கண்டிப்புச் செய்ய வேண்டும்.

முடிவுரை :

நம்மை நோயில் வீழாமல் காப்பது தூய்மை, தூய்மைக்குச் சுற்றுப் புறத்தைப் பாதுகாத்திட வேண்டும். தூய்மை இறைவனுக்கு ஈடாகும். "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது பழமொழி. எனவே, நம் உள்ளத்தைத் தூய்மையாக வைத்துக் கொண்டு, நம் உடலை, வீட்டை, தெருவை, நாட்டை, சுற்றுப்புறச் சூழலைத் தூய்மையாகப் பாதுகாப்போம். நம் உயிரும் உள்ளமும் நலமுடன் திகழப் பாடுபடுவோமாக.!

-------------